1. உள்ளத்தின் ஆழத்தில் இருந்து 2

2. துதியுங்கள் 3

3. ஆசிரியர் வாழ்வில் ஓர்நாள் 3

4. ஜெபியுங்கள் 4

5. திருச்சபையின் வளர்ச்சி 5

6. என் ஆத்துமாவே 9

7. விரும்பி செய்ய வேண்டியவை 9

8. மகிழ்ச்சியான குடும்பம் 10

9. பிரசங்க குறிப்பு 12

10. உங்கள் கவனத்திற்கு 12

11. சிந்தனை துளிகள் 12

12. உண்மையான தீர்க்கதரிசி 13

13. வாலிபர் பகுதி – கற்றுக்கொள்ளுங்கள் 18

14. சிறுவர் பகுதி – அதிகாலையிலே 21

15. தேவ மனிதன் 22

16. கிறிஸ்துவுக்காக வாழ்ந்தவர்கள் 23

17. நாவு 24


## இதழின் உள்ளே ....



# இதயத்தின் ஆழத்தில் இருந்து....



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே

மேலே வானத்திலும் கீழே பூமியிலும் சகல அதிகாரமுடைய வல்லவராம் இயேசு கிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் என் இதயத்தின் ஆழத்தில் இருந்து அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெளியீடும் வெளிவர கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. வரும் நாட்களில் தடையில்லாமல் வெளிவர ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தரின் பெரிதான இரக்கத்தால் எனது மூத்த மகளின் திருமணம் கடந்த மே மாதம் தேவ சித்தப்படி நடைபெற கர்த்தர் உதவி செய்தார். அழைப்பு கொடுத்தவர்களில் பெரும்பாலானோர் திருமணத்திற்கு வந்து சென்றது மிக்க மகிழ்ச்சி கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

கர்த்தரின் மிகப் பெரிய கிருபையால் கேபிள் டிவியில் செய்தி கொடுத்து வந்த அடியேனை சாட்டிலைட் டிவியாகிய இமயம் டிவியில் செய்தி கொடுக்கும் பாக்கியத்தை அருளிச் செய்திருக்கிறார். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை காலை 5.30–5.45 வரையிலும் ஒளிபரப்பாக கர்த்தர் உதவி செய்து வருகிறார். அதற்காக தேவனைத் துதிக்கிறேன். ஒவ்வொரு வாரமும் பல வகையான இடங்களுக்கு நேரிலும் சென்று பாடல், இசை, செய்திகளை கூறுகிற பாக்கியத்தைக் கொடுத்து வருகிறார்.

தொடர்ந்து ஊழியக் காரியங்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள். தேவ இராஜ்யம் என்னும் தோட்டத்தில் வேலை செய்கிற அடியேனுக்கு கர்த்தர் தொடர்ந்து பெலன் தரும்படியாகவும், ஓய்வில்லாமல் ஓடுகிற வாய்ப்பை தொடர்ந்து பெற்றுக் கொள்ளவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தவும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊழியருக்கு பின்னாக ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி வேத வசனத்திற்கு நேராகவும், கர்த்தருக்கு நேராகவும் திருப்பும் பணியை பரிசுத்தமாய், உண்மையாய் செய்வதற்கு ஜெபித்துக் கொள்ளுங்கள். காலங்களையும், சமயங்களையும் மாற்றி அமைக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

# துதியுங்கள்

- கடந்த நாட்களில் விபத்து, வியாதி, இயற்கை சீற்றம் போன்ற காரியங்களில் இருந்து விலக்கி காத்து வந்ததற்காக, துதியுங்கள்.
- நாம் பாவிகளாய் இருந்த போதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது பாவத்தை பாராதபடி நம்மேல் உள்ள அன்பை சிலுவையின் மூலம் வெளிக் காட்டினதற்காக துதியுங்கள்.
- எந்த வகையிலும் தகுதியில்லாத நமக்கு ஆண்டவர் கொடுத்து வருகிற நன்மையான ஈவுக்காக துதியுங்கள்.
- பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த நமது குடும்பச்சூழ்நிலையை நமக்கும் இந்த வாழ்வா என்று சொல்லக்கூடிய அளவில் ஆண்டவர் நம்மை சமுதாயத்தில் உயர்த்தி வந்து கொண்டு இருப்பதற்காக துதியுங்கள்.
- நமது குடும்பங்களில் நன்மையான காரியங்கள் நடைபெறுவதற்கு கர்த்தர் சித்தம் கொண்டதற்காக துதியுங்கள்.
- நமது பிள்ளைகள் கல்வியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றதற்காகவும் நல்ல கல்லூரியில் உயர் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பை பெற்றமைக்காக துதியுங்கள்.
- அனைத்து வகையான தேவைகளையும் கர்த்தர் ஆச்சரியமாய் சந்தித்ததற்காக துதியுங்கள்.
- கலங்கின நாட்களில் உனது கலக்கம் வீண் என்று சொல்லக்கூடிய அளவிலும் பயப்பட்ட காரியங்களில் உனது பயம் தேவையற்றது என்று உணரக்கூடிய வகையில் கர்த்தர் செயல்பட்டதற்காகத் துதியுங்கள்.
- கிறிஸ்துவை உண்மையாக ஏற்றுக் கொண்ட கிருபை பெற்றதற்காக துதியுங்கள்.
- கிறிஸ்துவின் மூலம் உண்டாகும் அல்லது கிடைக்கக் கூடிய உண்மையான ஆசீர்வாதங்களாகிய மெய்சமாதானம், திருப்தியான வாழ்வு, விடுதலை வாழ்வு மற்றும் பரலோக இன்பத்தை குறித்த அறிவை பெற்றுக் கொண்டதற்காக துதியுங்கள்.

## ஆசிரியர் வாழ்வில் ஓர் நாள்

தூத்துக்குடியில் உள்ள ஒரு ஆலயத்திற்கு லெந்து கால கூட்டத்தில் செய்தி கொடுக்க அழைக்கப்பட்டிருந்தேன். அப்போது என்னை அழைத்த போதகர் இந்த ஆண்டு அனைத்து கூட்டங்களுக்கும் வேத வசனத்தை மட்டும் பிரசங்கிற ஊழியர்களையே அழைத்திருக்கிறோம் என்று கூறினார். ஏன் என்று கேட்டேன். போன வருடம் வல்லமையான ஊழியர் என்று தங்களைக் கூறிக் கொள்கிறவர்களும் இவரிடத்தில் மிகுந்த வல்லமை உண்டு என்று மக்களால் கூற விரும்புகிற ஊழியர்களையும் அழைத்திருந்தோம். அப்படி அழைத்த ஊழியரில் ஒருவரை ஒரு குடும்பம் தங்களது இல்லத்திற்கு ஜெபிப்பதற்காக அழைத்துச் சென்றார்கள். ஜெபித்த ஊழியர் ஜெபத்தோடு நிறுத்தாமல் தனது வல்லமையை வெளிக்காட்ட பல காரியங்களைக் கூறினார். என்னவெனில் நீங்கள் குடியிருக்கும் வீடு உங்களுக்கு சரியல்ல இதில் தீட்டு இருக்கிறது. பிசாசு உள்ளது இந்த வீட்டில் இருந்தால் சாபம் உங்களை விட்டு அகலாது. எனவே நீங்கள் வேறு ஒரு வீட்டை பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் வாஸ்து சரியில்லை என்று கூறும் புற ஜாதியாரைப் போல அந்த ஊழியர் புலம்பினாராம். அவரை அழைத்த குடும்பத்தினர் ஆண்டவரை நன்கு அறிந்தவர்கள் எனவே எந்த சாபம் இருந்தாலும் எந்த பிசாசு இருந்தாலும் அவைகளை முறியடிக்கும் வல்லமை நமது கர்த்தர் இயேசுவுக்கு உண்டே இவரோ பெரிய ஊழியர் என்று கூறிக்கொண்டாலும் வீட்டை மாற்றுங்கள், அது சரியில்லை இது சரியில்லை என்று கூறுகிறாரே என்று அந்த குடும்பத்தினர் குருவானவரிடம் கூறி இனிமேல் இப்படிப்பட்ட மாயவித்தைக் காட்டும் வல்லமை ஊழியர்களை அழைப்பதில்லை என்று முடிவெடுத்து வேத வசனத்தை மட்டும் கலப்படம் இல்லாமல் போதிக்கும் ஊழியர்களை அழைத்திருக்கிறோம் என்று கூறினார். ஜனங்கள் வேத வசனங்களைக் கேட்க ஆவல் உள்ளவர்களாய் மாறிவருவதற்காக தேவனைத் துதிக்கிறேன். வேதமே வெளிச்சம், வேத வசனமே பாதை காட்டும் நல்ல தீபம் என்பதை நினைவில் கொள்வோம்.





# ஜெபியுங்கள்

நமது பிள்ளைகள் கிறிஸ்துவோடு தனித்திருந்து வாசம் பண்ணக்கூடிய அனுபவத்தை பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.

கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த அநேகர் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க ஜெபியுங்கள்.

சடங்காசாரங்களுக்கும், பாரம்பரியமான காரியங்களுக்கும் வெறும் ஆடல் பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் செயல்கள் மாறவும் உண்மையான உணர்வுள்ள காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

சொந்த பிள்ளைகள் ஆதரவாய் இருப்பார்கள் என்று எண்ணி தனது பிள்ளைகளுக்காக இராப்பகலாய் உழைத்த அநேக பெற்றோர்கள் அப்பிள்ளைகளால் வேதனைகள் அனுபவிக்கிற குடும்பத்தினர்களுக்காக ஜெபியுங்கள்.

பெற்றோரின் அன்புக்காக ஏங்கி தவித்திடும் அநேக பிள்ளைகள் பெற்றோர்களின் சண்டைகளைத் தான் பார்க்கிறார்கள் எனவே பிள்ளைகளுக்கு முன் பெற்றோர்களின் வாழ்வு மாதிரியாக இருக்க ஜெபியுங்கள்.

பணம் தான் வாழ்க்கை என்கிற நிலை மாறி கிறிஸ்து இல்லை எனில் நமது வாழ்வில் ஒன்றுமில்லை என்கிற எண்ணங்களைப் பெற்று கொள்ள ஜெபியுங்கள்.

திருமணமான அநேக ஆண்கள் தங்களது சொந்த பெற்றோரை மறந்து பெற்றோரோடு பேசுவதற்கு இடங்கொடாமல் (பணம் கொடுக்கிறார்களோ இல்லையோ ஒரு நாளைக்கு 1 நிமிடமாவது பேசலாம்) மனைவிக்கு அடிமையாக வாழ்கிற ஆண்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள். ஏனெனில் அநேகக் குடும்பங்களில் பெற்றோர்கள் எதிர்பார்ப்பது பிள்ளைகளின் அன்பையே.

ஒரு காலத்தில் பணத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். இப்போது அப்படியில்லை அநேக வழிகளில் பணம் சம்பாதிக்கும் திறமை படைத்த அநேகர் பணம் தான் வாழ்க்கை என்று ஓடிக் கொண்டு இருக்கிற மக்கள் மனம் மாற ஜெபியுங்கள்.

படித்துக் கொண்டு இருக்கும் பிள்ளைகள் தங்களது கவனத்தை படிப்பதில் இருந்து திசை திருப்பும் காரியங்களில் அவர்களது எண்ணங்கள் சிதறாமல் குடும்பச் சூழ்நிலையை கருத்தில் கொண்டு படிக்க ஜெபியுங்கள்.

தனது சொந்த வேலைகளுக்காக பலவகையான வாகனங்களில் (cycle, bus, motar bike, car, jeep, train, lorry, aeroplane, ship) பயணம் செய்யும் மக்களுக்காகவும் அவைகளை ஓட்டிச் செல்லும் நபர்களுக்காகவும், அவர்களது பாதுகாப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



சகோ.J.**மெல்கிசேதேக்**, மூன்றடைப்பு

# திருச்சபையின் வளர்ச்சி

சபைகளில் ஒரு பெரிய கோபுரம் கட்டிவிட்டால் சபை வளர்ச்சி அடைந்துள்ளது என்று எண்ணிக் கொள்கிறார்கள். ஆலயத்தை இடித்து பெரிதாகக் கட்டினால் சபை வளர்ச்சி அடைந்துள்ளது என்று எண்ணிக் கொள்கிறார்கள். சபைகளில் மக்களின் கூட்டம் அதிகரித்தால் சபை வளர்ச்சி அடைந்துள்ளது என்று எண்ணிக் கொள்கிறார்கள். நவீன இசைக் கருவிகளை வைத்து இசை மீட்டினால் அல்லது நல்ல கொயர் என்கிற பெயரில் நடனங்கள் (பாடலுக்கேற்ற) புரிந்தால் அல்லது குளிரூட்டப்பட்ட ஆலயமாக மாற்றினால் அல்லது அதிக எண்ணிக்கையுள்ள அரிசி மூடையை வைத்து அசனம் நடத்தினால் அல்லது பெரிய ஊழியர்கள் என்று எண்ணிக் கொள்ளும் நபர்களைக் கொண்டு கூட்டம் நடத்தினால் அல்லது அதிக அளவில் காணிக்கை வந்தால் அல்லது அதிக அளவில் மிஷினரிகளைத் தாங்கினால் அல்லது ஏழை எளியோர்க்கு உதவி செய்யும் நற்பண்புள்ளவர்கள் இருந்தால் சபை நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்று எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் உண்மையான வளர்ச்சி என்று கூற முடியாது.

நமது திருச்சபையானது வேத வசனத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைய வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறபடியினால் இச்செய்தியை இந்த வெளியீட்டில் எழுதக் கூடிய உந்துதலை ஆண்டவர் கொடுத்துள்ளார். அப் 9:31 **அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.**

ஒரு திருச்சபை எதிலெல்லாம் பெருக வேண்டும் என்பதற்கு இந்த ஒரு வசனமே நமக்கு தெளிவான விளக்கத்தைக் கூறுகிறது.

**1) அப்9:31 சபைகள் சமாதானம் பெற்று:**

வளர்ச்சி அடைந்த திருச்சபையில் சமாதானம் நிறைந்து காணப்படும். தனது சொந்த மனைவியோடு ஐக்கியம் இல்லாமல் அல்லது நல்லுறவு இல்லாமல் ஆராதனை நடத்தும் பல பாஸ்டர்கள் மற்றும் போதகர்களை அறிந்திருக்கிறேன். திருச்சபையின் வளர்ச்சி என்றாலே சமாதானம் பெற்ற மக்கள் நிறைந்திருக்கும் சபையாக இருக்க வேண்டும். சமாதானம் என்பது அந்தரங்களிலும் நிம்மதியாக வாழும் வாழ்வு. அந்த சமாதானம் இயேசு கிறிஸ்துவால் சிலுவையின் மூலம் (கொலே1:20) சம்பாதிக்கப்பட்ட சமாதானம். அந்த சமாதானம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் எனது பாவம் கழுவப்பட்டுள்ளது என்கிற நிச்சயத்தை பெற்றுக் கொண்ட அனுபவம் உள்ள வாழ்வு ஆகும். சுருக்கமாக சொல்வோமெனில் இயேசு கிறிஸ்துவினால் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்ட மக்கள் பெருகி உள்ள சபையாக காணப்படும். இன்றைய நிலையில் உள்ள சபைகளை கவனித்தால் இந்த அனுபவம் உள்ள மக்கள் குறைந்துதான் காணப்படும். ஆராதனைக்காக வரும் மக்களுக்கு உலக ஆசீர்வாதத்திற்குரிய செய்தி அதிகம் கூறப்படுகிறதே ஒழிய பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்வதற்கான காரியங்கள் அறிவுறுத்தப்படுவது வெகு குறைவு.

“இயேசு கிறிஸ்து தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்று வேதம் கூறுகிறது. பாவ மன்னிப்பை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படுவதினால்



மட்டுமே பெற்று கொள்ள முடியுமே தவிர வேறு எந்த வழியிலும் அல்லது முறையிலும் பெற்றுக் கொள்ள முடியாது. பாவ மன்னிப்பின் நிச்சயம் உங்களுக்குள் வந்தால் ஜாதி வெறி உங்களுக்குள் இருக்காது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் இருக்காது. பணக்காரன் ஏழை என்கிற வேற்றுமை இருக்கவே இருக்காது. பாவ மன்னிப்பின் நிச்சயம் பெறாத போதகர்கள், ஊழியர்கள், பாஸ்டர்கள் பெருகி இருப்பதால் அப்படிப்பட்டவர்கள் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெறாத துன்மார்க்கமான செயல்கள் செய்துவரும் பணக்காரர்களை சார்ந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ற முகஸ்துதி பண்ணிக் கொண்டு செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். உண்மையான திருச்சபையின் வளர்ச்சி எனில் அங்கு இயேசு கிறிஸ்துவினால் பாவ மன்னிப்பு பெற்றவர்கள் பெருகி இருப்பார்கள். நீங்கள் எந்த சபைக்கு செல்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, உங்கள் தனிப்பட்ட வாழ்வில் பாவ மன்னிப்பின் நிச்சயம் உள்ளதா என்ற உணர்வோடு செயல்படுங்கள். “**பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்றவர்கள் சபை தேர்தல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள்**”. பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்ற குருவானவர்களோ, பேராயர்களோ தங்களுக்கென்று சாதகமான ஒரு குரூப் வேண்டும் என்கிற எண்ணத்தில் சபை மக்களை தூண்டிவிட்டு செயல்பட மாட்டார்கள். அதாவது தாங்களே ஒரு அணியை உருவாக்க நினைக்க மாட்டார்கள். பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்ற சுயாதீன ஊழியர்களோ அல்லது பாஸ்டர்களோ திருச்சபை மக்களின் காணிக்கைகளைக் குறிவைத்து செயல்படமாட்டார்கள். “**உண்மையான வளர்ச்சி பெற்ற திருச்சபை அசனத்திற்கு அல்ல. வசனத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கும்.**”

**2) அப்9:31 சபைகள் பக்தி விருத்தி அடைந்து**

வளர்ச்சி பெற்றத் திருச்சபை பக்தி விருத்தியடைந்து காணப்படும். பக்தி விருத்தி என்றால் என்ன? என்ற கேள்விக்குரிய விடையை தெளிவாக தெரிந்து கொள்வது அவசியம். பக்தி விருத்தி என்பது தனிப்பட்ட வாழ்வில் தேவனோடு உள்ள உறவை பெருக்கி கொள்வது ஆகும். ஆவியில் தங்களையும் அறியாமல் ஆடிக்கொண்டிருக்கும் அநேகர் பக்தியில் விருத்தியடையாதவர்களே. இன்று அநேக கூட்டங்களுக்கு ஓடிக்கொண்டே இருக்கும் அநேகர் தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவரோடு உறவாடாதவர்களே, அநேக சபைகள், ஜனங்கள் தனிப்பட்ட வாழ்வில் தேவனோடு சஞ்சரிக்கும் அனுபவத்தைக் கற்றுக் கொடுக்க தவறி விடுகிறது. ஆவியில் நிறையுங்கள், அந்நிய பாஷை பேசுங்கள் என்பதை மட்டும் கூறிக்கொண்டு இருக்கும் சபைகளில் பெரும்பாலும் தனிபட்ட வாழ்வில் தேவ உறவு இல்லாதவர்களாய் இருக்கின்றனர். ஆபிரகாம் அடிக்கடி தேவனை தொழுது கொள்ளுகிற சம்பவத்தைக் காண முடியும். தானியேல் எந்த சூழ்நிலையிலும் தேவ உறவை விட்டு விலகவில்லை. பவுல், பேதுரு போன்றவர்களும் நற் சாட்சியுடன் இருந்தார்கள். அனுதினமும் வாசிக்கும் வேதவசனத்தை தனித்து உட்கார்ந்து தியானித்தாலே நமது பக்தி விருத்தியடையும். நமது வேலை நேரத்திலும் தேவ சிந்தனையுடன் வாழும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வதுதான் சிறந்த பக்தி விருத்தி. **பக்தி விருத்தியடைந்த மனிதர்கள் தேவனுடைய விருப்பத்தை மட்டுமே நிறைவேற்றும் எண்ணமுள்ளவர்களாய் இருப்பார்கள்.** பக்தி விருத்தியில்லாத சபைகளில் சின்ன சின்ன விஷயத்திற்கும் போட்டி மனப்பான்மையோடு செயல்படுவார்கள். பக்தி விருத்தியடையாத சபைகளில் பாவம் செய்கிற மக்கள் அதிகமானவர்களாயிருப்பார்கள். பக்தி விருத்தியடைந்த சபை தேவ உறவை காத்துக் கொள்வதில் தீவிரம் கொண்டு காணப்படும்.

1985-86ம் ஆண்டுகளில் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் மூலம் தஞ்சாவூரில் நடைபெற்ற Blesso என்ற கூடுகையில் கலந்து கொள்ளும் வாய்ப்பை ஆண்டவர் கொடுத்தார். அப்போது அங்கு கண்ட காட்சிகள் என்னை தேவனோடு கிட்டிச் சேருவதற்கு காரணமாக அமைந்தது. அது என்னவெனில் நடத்துகிற, தலைமைத்துவத்தில் இருக்கிற ஊழியர்களும் சாதாரணமாக காணப்பட்டனர். அங்கு ஒருவருக்கொருவர் பேசும் பொழுதெல்லாம் பக்தி விருத்திக்குரிய காரியங்களையே பேசிக் கொண்டனர். எந்த பொருளும் களவு போனதில்லை, சாப்பாடு விஷயத்தில் யாரும்

எந்த குறையும் சொன்னதில்லை அடிப்படை வசதிகள் குறைவாக இருந்தாலும் அதை யாரும் பொருட்படுத்தாமல் ஆங்காங்கே கூடி ஜெபிப்பவர்களும், கேட்ட செய்தியை குறித்து பேசிக் கொள்வதும் அநேகருக்கு ஆசீர்வாதமாக செயல்பட்ட கூடுகையாக இருந்தது.

உண்மையான திருச்சபையின் வளர்ச்சியானது சபை பக்தி விருத்தியடைந்து காணப்படும்.

### 3) அப் 9:31 சபைகள் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடு காணப்படும்

வளர்ச்சி அடைந்த திருச்சபையில் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் நிறைந்து காணப்படும். கடந்த வெளியீட்டில் எழுதியதுபோல் வேத வசனங்களுக்கு கீழ்ப்படிவது தான் முக்கியமானதாக கொண்டு செயல்படும் திருச்சபையாக இருக்கும். இன்று அநேக திருச்சபைகளில் ஞானஸ்நானம், அபிஷேகம், இது ஒன்றுதான் பிரபலமாகப் பேசப்படுகிறதேயொழிய இன்னும் அநேக வேதவசனங்களுக்கு கீழ்ப்படிவதற்குரிய காரியங்களைக் கூறுவதில்லை, அநேகர் பெண்கள் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையோடு ஆடுவார்கள். ஆனால் சொந்த கணவரிடத்தில் அன்பு காட்டுவதில்லை, சகோதர சிநேகம் இருப்பதில்லை, விட்டுக் கொடுக்கும் தன்மை இருப்பதில்லை, சின்ன விஷயத்திற்கும் எரிச்சல், சின்ன காரியத்திற்கும் கோபம் நிறைந்து காணப்படும் திருச்சபையின் மக்களைக் காணமுடியும். வேத வசனங்களுக்கு கீழ்படிந்து நடக்கின்ற தன்மை உண்மையாக இருக்கும் எனில் திருச்சபை உண்மையாகவே வளர்ந்து பெருகுகிறது என்று எண்ணலாம். இன்று சிலர் ஊழியர்களுக்கு பயப்படும் பயம் உண்டு. சபை போதகர்களுக்கு பயப்படுகிற பயம் உண்டு. ஆனால் ஆண்டவருக்கு பயப்படுகிற பயம் இருப்பதில்லை. சபைகளில் வெறும் ஆராதனைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் ஆண்டவருக்கு கொடுப்பதில்லை. கர்த்தருக்கு பயப்படாத சபை காணிக்கை விஷயங்களில் சரியாக இருப்பதில்லை. நமது சபை மக்கள் ஆண்டவருக்கு பயப்படுகிற பயத்தில் வளர்ச்சியடைய செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். ஒரு நாள் ஒரு முதியவர் ஒருவர் மூன்று இளம் வாலிபர்களை அழைத்து ஆளுக்கொரு ஆப்பிள் பழத்தைக் கொடுத்து இதை ஒருவருக்கும் தெரியாமல் தின்று வாருங்கள் என்று கூறினார். மூன்று பேரும் ஆப்பிள் பழத்தைப் பெற்றுக் கொண்டு அதை ஒருவருக்கும் தெரியாமல் தின்பதற்காகப் புறப்பட்டார்கள். அதில் ஒருவன் இருட்டான இடத்தில் உட்கார்ந்து தின்றான். ஒருவருக்கும் தெரியாது என்று எண்ணி அதை தின்று விட்டான். இன்னொருவன் தன்வீட்டின் தனி அறையை நன்கு பூட்டிக் கொண்டு அதற்குள்ளாக உட்கார்ந்து நிதானமாக தின்று தீர்த்தான். ஆனால் இன்னொருவனோ இருட்டிலும், மறைவான இடத்திலும், தனி அறையிலும் அதை உண்ண நினைக்கும் போதெல்லாம் மனிதர்களுக்கு தெரியாமல் தின்று விடலாம். ஆனால் ஆண்டவர் நம்மை எந்த சூழ்நிலையிலும் பார்க்கிறாரே என்ற எண்ணம் இருந்தபடியால் அதை உண்ணாமல் கையிலேயே வைத்திருந்தான். மூன்று பேரையும் முதியவர் அழைத்தார். அவர்களில் இருவர் தாங்கள் பழங்களை எப்படி மற்றவர்களுக்கு தெரியாமல் உண்டோம் என்பதை எடுத்துரைத்தனர். தங்களது திறமையை பெருமையாகப் பேசிக்கொண்டனர். ஒருவனோ கையில் பழத்தோடு நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஏன் இந்தப் பழத்தை உண்ணவில்லை என்று கேட்டபொழுது அவன் கூறினானாம். நான் எத்தனையோ இடங்களில் யாருக்கும் தெரியாமல் தின்பதற்கு முயற்சி பண்ணினேன். ஆனால் ஆண்டவர் என்னை கவனிக்கிறார். அவர் பார்க்கிறார் என்று வசனம் கூறுகிறபடியினால் ஆண்டவருக்கு தெரியாமல் உண்ண முடியாது என்று கொண்டு வந்து விட்டேன். என்னால் யாருக்கும் தெரியாமல் இப்பழத்தை உண்ண முடியவில்லை என்று கூறினானாம். முதியவர் அவனைப் பாராட்டினார். மனிதனுக்கு தெரியாமல் எதையும் செய்து விடலாம். ஆனால் ஆண்டவரது கண்ணை யாரும் மறைக்க முடியாது. **கர்த்தருக்கு பயப்படுகிற பயம் நமக்கு இருக்குமானால் துணிகரமான தவறுகளை நம்மால் செய்ய இயலாது**. ஏமாற்ற இயலாது. வஞ்சிக்க இயலாது,



பணத்திற்காக எதையும் செய்யும் இந்த உலகத்தில் கவனமாக ஆண்டவருக்கு பயந்து தீமையோடு எதிர்த்து நிற்காமல் வாழும் பாக்கியம் பெற்றுக் கொள்வோம். எனக்கு கர்த்தருக்கு பயப்படுகிற பயம் உள்ளதா என்று நாம் அனுதினமும் சோதித்து அவருக்கு பயப்படுகிற வாழ்வில் முன்னேற்றம் அடைவோம். உண்மையான திருச்சபையின் வளர்ச்சி பெற்றிருந்தால் அதில் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் நிறைந்த மக்கள் பெருகி இருப்பார்கள். மற்ற எல்லா வகையான காரியத்திலும் வளர்ந்து கர்த்தருக்கு பயப்படாத மக்களாக இருந்தால் நமது திருச்சபை சரியான வளர்ச்சி பெறவில்லை என்று தான் அர்த்தம். கர்த்தருக்குப் பயந்த மக்கள் நிறைந்த திருச்சபை கர்த்தருக்கு உகந்த காரியங்களையே செய்து கொண்டிருக்கும்.

### 4) அப் 9:31 சபைகள் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.

உண்மையான வளர்ச்சி பெற்ற திருச்சபையில் ஆவியானவரின் ஆளுகை சரியாக இருக்கும். வெறும் ஆராதனை அல்லது ஆர்ப்பரிப்பு என்பதைக் காட்டிலும் தேவ ஆவியானவரின் அசைவாடுதல் இருக்கும். ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் ஆளுகைக்குள் வந்து விட்டால் அவனுடைய வாழ்வில் பெரும் மாற்றத்தைக் காணமுடியும். பேச்சில் மாற்றம், சிந்தையில் மாற்றம், செயலில் மாற்றம் உள்ளான வாழ்வில் கண்டிப்பாக இருக்கும். தேவ ஆவியானவரின் ஆறுதல் என்பது மிக மிக வித்தியாசமானது. உலக பாரங்கள் நம்மை நெருக்கும் போது வேத வசனத்தின் மூலம் வரும் ஆறுதல் மிகவும் மேன்மையானது. தேவனோடு உறவாடும் பொழுதும், வேத வசனங்களைத் தியானிக்கும் பொழுதும் ஆவியானவர் நம்மைத் தேற்றுவதை அல்லது பாதைக் காட்டுவதை அல்லது எச்சரிப்பை நம்மால் உணர முடியும். செய்திகளை கேட்கும்போது வேதவசனத்தால் நாம் உணர்வடைய முடியும். இந்த ஆளுகை நம்மில் இருக்கும் போது ஆண்டவர் நம்மோடு வேதவசனத்தின் மூலம் இடைபடுவதை உணர முடியும்.

இந்த அனுபவம் நமது திருச்சபையில் இருக்கும் எனில் அவர்கள் தேவனோடு நேரங்களை செலவழிக்கும் மக்களாக இருப்பார்கள். **இன்று பெரும்பாலான திருச்சபைகளில் ஜனங்களை தேவனோடு சஞ்சரிப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. பரிசுத்த ஆவியின் ஆறுதல் அல்லது ஆளுகையை உணருவோமெனில், எந்த சூழ்நிலையிலும் நாம் தனிமையானவர்கள் அல்ல என்ற உணர்வும் சூழ்நிலையை காரணம் காட்டி தேவனை விட்டு விலகாத எண்ணம் உறுதியானதாக இருக்கும்**. இணைந்து ஜெபிப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்களோ இல்லையோ நாம் தனித்து தேவ ஆவியானவரின் ஒத்தாசையோடு பரிசுத்த ஆவியின் ஆறுதலோடு ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுகின்ற அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும். தேவ ஆவியானவரின் ஆளுகை என்பது அதை அனுபவிப்பதின் மூலமே உணர்ந்து கொள்ள முடியும். ஆண்டவரால் ஆவியானவரின் அபிஷேகம் பெற்றால் தான் இயேசு கிறிஸ்துவின் வருகையில் நாம் ஆவியானவரைப் போல் பறந்து செல்லலாம் என்று தவறாக போதித்து வருகின்றனர். ஆவியானவரின் ஆளுகை என்றால் நம்மை சகல சத்தியத்திற்குள் நம்மை வழி நடத்துவார். பரிசுத்தமாய் வாழ்வதற்கு தேவ ஆவியானவரின் ஆளுகை மிக மிக அவசியம். வளர்ந்து வரும் திருச்சபையில் தேவ ஆவியானவரின் ஆளுகை நிறைந்த மக்கள் பெருகி இருப்பார்கள். தேவ ஆவியானவரின் ஆறுதலை நீங்கள் பெற்றவர்களாக இருந்தால் நீங்கள் யாருக்கும், எந்த ஊழியருக்கும், எந்த பேராயர் அல்லது குருவானவருக்கும், எந்த உலக ஐசுவரியவான்களுக்கும் அடிமைகளாய் இருக்க மாட்டீர்கள். நாம் சுயாதீனர்கள், அடிமைத்தன வாழ்வில் இருந்து என்றோ ஆண்டவர் நம்மை விடுவித்து விட்டார். ஆண்டவரால் விடுதலை பெற்ற நாம் ஆவியானவரின் ஆளுகைக்குள் இருக்கின்றோம். அவரது ஆளுகை இருக்கும் பொழுது அவரது பாதுகாப்பு, அவரது வழிநடத்துதல், அவரது பராமரிப்பு, அவரது எச்சரிப்பு போன்ற அனைத்து வகையான காரியங்களையும் நாம் பெற்றுக் கொள்வோம். அப்படியானால் வளர்ச்சி பெற்ற திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல் பெருகினதாகக் காணப்படும். இப்படிப்பட்ட திருச்சபைகளை இக்காலத்தில் காண்பது அரிதாக இருந்தாலும் எனது தனிப்பட்ட வாழ்விலாவது இப்படிப்பட்ட வளர்ச்சி பெற்று வாழக்கூடிய கிருபைதாரும் ஆண்டவரே என்ற ஜெபத்தோடு செயல்படுவோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.




## எதற்காக ஸ்தோத்தரிக்க வேண்டும்?

1. கிறிஸ்துவுடனே உயிர்ப்பிக்கப்பட்டோம். (எபே 2:1, 5)
2. தேவனால் அன்பு கூறப்பட்டோம். (எபே 2:4)
3. கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டோம். (எபே 2:6,7)
4. கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார வைக்கப்பட்டோம். (எபே 2:7)
5. தேவனாலே விசுவாசத்தை ஈவாகப் பெற்றோம். (எபே 2:8)
6. தேவனுடைய செய்கையாக்கப்பட்டோம். (எபே 2:10)
7. கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமீபமானோம். (எபி 2:13)
8. ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை கிறிஸ்து மூலமாய்ப் பெற்றோம். (எபே 2:18)
9. பரிசுத்தவான்களோடு ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமானோம். (எபே 2:19)
10. ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமானோம். (எபே 2:22)

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. (சங் 103:1,2)

## விரும்பி செய்ய வேண்டியவைகள்

- பேச விரும்பினால் இனிமையாகப் பேசுங்கள்
- விதைக்க விரும்பினால் அன்பை விதையுங்கள்
- கொடுக்க விரும்பினால் மன்னிப்பைக் கொடுங்கள்
- விட்டுவிட விரும்பினால் பாவத்தை விட்டு விடுங்கள்
- அழிக்க விரும்பினால் கெட்டப் பழக்க வழக்கங்களை அழியுங்கள்
- மேற்கொள்ள விரும்பினால் பிறர்நலத்தை மேற்கொள்ளுங்கள்
- தடுக்க விரும்பினால் கோபத்தை துவக்கத்திலேயே தடுத்து விடுங்கள்.



# மகிழ்ச்சியான குடும்பம்

சகோ.J.**மெல்கிசேதேக்**, மூன்றடைப்பு



குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பது தேவதிட்டத்தில் ஒன்றாகும். ஆனால் அநேகக் குடும்பங்களில் மகிழ்ச்சி என்பது கேள்விக்குறியாக உள்ளது. இந்த வெளியீட்டில் திருமணமாகி குடும்ப வாழ்வில் இணைந்திருக்கும் அநேக குடும்பங்கள் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறது. எதினால் மகிழ்ச்சி கெடுகிறது அதை எப்படி மாற்றியமைக்கலாம் என்று தெளிவாக அறிந்து கொள்ள கர்த்தர் உதவி செய்வாராக.

எபே 5:31,32– "இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்". **முதலாவதாக** திருமணத்திற்கு முன் கணவன் மனைவி இருவரும் வெவ்வேறு வகையான சூழலில் வளர்க்கப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு பெற்றோரும் தன்பிள்ளைகளை நன்கு அரவணைத்து வளர்த்திருப்பார்கள். எனினும் கணவன் மனைவி உறவு என்பது பெற்றோர் பிள்ளைகள் என்கிற உறவை காட்டிலும் மிகமிகச் சிறந்தது. திருமணத்திற்கு முன் தனது மகன் என்னையே சுற்றி வருவானே ஒருவேளை அந்த அன்பு திருமணத்திற்கு பின் இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிற தாய்மாரைப் பார்த்திருக்கிறேன். தான் கடைக்கு போகச் சொன்னால் போகாத என் மகன் மனைவி வந்தவுடன் அவளையே சுற்றி வருகிறானே என்று ஆதங்கப்படுவோரும் உண்டு. அவளுக்காக என்றால் அதைச் செய்கிறான், இதைச் செய்கிறான் என்று கூறுகிறவர்களும் உண்டு. கணவன் மனைவி ஐக்கியம் என்பது மிகமிக முக்கியமானது. வீட்டிற்கு வெளியில் அநேகம் பிரச்சனைகள் இருந்தாலும் அதை தாங்கி கொள்ளலாம். கணவன் மனைவிக்குள் பிரச்சனை வரும் போது இருவரது உள்ளமும் மிகுந்த பாரத்தோடு காணப்படும். உங்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியால் இருக்க வேண்டும் எனில் முதலாவது ஆண்டவருக்கு முதலிடம் கொடுங்கள். இணைந்து ஜெபியுங்கள். உங்களுக்கு தலைவர் இயேசு கிறிஸ்து தான் என்பதை முதலில் அறிந்து கொள்ளுங்கள். மனைவியின் அன்பைக் காட்டிலும் அல்லது கணவரின் அன்பைக் காட்டிலும் இயேசு கிறிஸ்துவின் அன்பு மேலானது என்பதை அனுபவரீதியாக புரிந்து கொள்வீர்கள் எனில் உங்கள் குடும்ப வாழ்வு மிக்க மகிழ்ச்சியானதாகவே இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை.

**இரண்டாவது** கணவராய் இருக்கும் உங்களுக்கோ அல்லது மனைவியாய் இருக்கும் உங்களுக்கோ உங்களது பெற்றோர்களோ அல்லது உடன்பிறப்புகளோ முக்கியமானவர்கள் தான் ஆனால் திருமணத்திற்கு பின் உங்கள் கணவன் அல்லது மனைவி தான் முக்கியமானவள் என்ற எண்ணத்திற்குள் கண்டிப்பாக வரவேண்டும். ஏனெனில் கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்று வேதம் கூறுகிறது.

இந்த அனுபவம் வந்துவிட்டவுடன் பெற்றோரை வெறுக்க வேண்டும் என்பது அர்த்தமில்லை. இதுவரையிலும் நமது அனைத்து காரியத்திலும் உறுதுணையாக இருந்தார்களே என்பதை ஒருபோதும் மறந்துவிடவே கூடாது. ஆனால் கணவன் மனைவியின் அன்புக்கிடையில் பெற்றோர்களின் அன்பு குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது மிக அவசியம். அநேக குடும்பங்களில் மனைவியின் பெற்றோர்கள் மகளுக்காக ஐயோ என் மகளை இப்படி வளர்த்தேனே அப்படி வளர்த்தேனே என்று வாதிடுவார் உண்டு. சில குடும்பங்களில் இவள் வந்தபிறகு என் மகனும் இப்படி மாறிட்டானே அப்படி மாறிட்டானே என்று கூறுவோரும் உண்டு. பிள்ளைகளுக்கு திருமணம் என்று முடித்து வைத்தபிற்பாடு அவர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவியாக இருக்கவேண்டுமோ அப்படி இருக்க வேண்டும். மாறாக அவர்கள் எங்களது கண்டிப்பில் இருக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது.

**மூன்றாவது** உங்களின் கணவரின் பெற்றோர்கள் மனைவியானவளுக்கு மிக மிக முக்கியம். ஒரு அருமையான கணவரை பெற்றுக் கொடுத்தவர்கள் அவர்கள். மனைவியானவள் தனது சொந்த பெற்றோரை நேசிப்பதைக் காட்டிலும் தனது மாமன் மாமியாரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். சில நேரங்களில் சில மாமியார்கள் கூறும் அறிவுரைகள் எரிச்சல் வரக்கூடிய செயலாக இருந்தாலும் தாயாக பாவித்து அன்பு கூர்ந்தால் பிரச்சனை பிரச்சனையாக தெரியாமல் மகிழ்ச்சியைக் காத்துக் கொள்ள முடியும். அதேபோல் கணவரும் தனது மாமன் மாமியாரிடம் அன்பாக நடந்து கொள்வது மிகமிக அவசியம். நமக்கென்று வாழ்க்கைத் துணையை கொடுத்திருக்கிறாா்களே என்ற எண்ணத்தோடு செயல்படுவது அவசியம். அன்பின் அடிப்படையில் அனைத்து காரியமும் செய்தால் மிக்க மகிழ்ச்சி நமது குடும்பத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும்.

**நான்காவது** உங்களது சொந்த பெற்றோர்கள் உங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இந்த வரிசை கிரமம் சரியாக இருக்கும் குடும்பம் மகிழ்ச்சியானதாகவே இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகம் இல்லை.

**முதலாவது** ஆண்டவர் என்பதை மறந்து போகாதிருங்கள். இந்த அனுபவம் இருந்தால் தனிப்பட்ட வாழ்வில் வேதம் வாசிப்பு, ஜெபம் போன்ற காரியங்கள் இருந்து கொண்டு இருக்கும். கணவனும் மனைவியும் இணைந்து ஜெபிக்கும் ஜெபம் அதிகரிக்கும். நமது வாழ்வு சிறப்பானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் இருக்க நமது படிப்போ, நமது செல்வமோ, நமது செல்வாக்கோ, நமது தொழிலோ முக்கியமானதல்ல. கிறிஸ்து ஒருவரே முக்கியமானவர் என்ற எண்ணம் இருந்து கொண்டு இருக்கும்.

**இரண்டாவது** கணவன், மனைவியின் ஐக்கியம். இது சரியாக இருந்தால் மனைவியோடு பேசுவதற்கு நேரம் செலவழிக்கிறவர்களாகவும், கணவரை கவனிப்பதில் முக்கியமானவளாகவும் இருப்பீர்கள். எனவே மனைவியானவள் கணவரை பிரியப்படுத்துவதிலும் கணவரானவர் மனைவியை திருப்திபடுத்தவும் தீவிரப்படுகிறவர்களாய் இருப்பார்கள். இந்த அன்பு நன்றாக இருந்தால் மனைவியின் சமையலில் எது கூடுதல் குறைவுகள் இருந்தாலும் அதைப்பற்றி அக்கரை கொள்ளாமல் ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டு இருப்பீர்கள்.

**மூன்றாவது** உங்களது மாமன், மாமியார் அந்த உறவையும் நன்கு காத்துக் கொள்ளுங்கள்.

**நான்காவது** உங்களது பெற்றோர் என்பதை நினைத்து பெற்றோருக்கு செய்ய வேண்டிய உதவி, பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள், பெற்றோருடன் இருக்கும் ஐக்கியம் அனைத்தையும் சரியாக வைத்துக் கொண்டால், வருமானம் குறைந்த குடும்பமாக இருந்தாலும், மகிழ்ச்சி நிறைந்த குடும்பமாகவே இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமில்லை. குழம்பிக்கொண்டிருக்கும் குடும்பங்கள் மகிழ்ச்சி நிறைந்த குடும்பங்களாக மாற கர்த்தர் உதவி செய்வாராக.



# பிரசங்க குறிப்பு



## சுவிசேஷத்தின் வல்லமை.

சுவிசேஷம் ஒரு மனிதனை நல்ல மனிதனாக மாற்றும் வல்லைமை உள்ளது.

**1. அப். 26:9**

கொலைவெறி என்ற எண்ணமும் தான் பின்பற்றும் மார்க்கம்தான் சரியானது என்ற எண்ணமும் பவுலுக்கு மாறி யார் மீதுள்ள கோபத்தில் அடிக்க வேண்டும் என்று இருந்தானோ அவருக்காக அடிபடுவதற்கும் அவருடைய வழிதான் மெய்யான வழி என்று அவரது சிந்தனையில் மாற்றம் வந்தது.

**சுவிசேஷம் ஒரு மனிதனின் சிந்தையை மாற்றும் வல்லமை உள்ளது.**

**2. பிலமோன் 1:11**

இவன் எதற்கும் உதவாதவன் என்ற ஒநேசிமு பயனற்றவன் என்ற ஒநேசிமு பவுலின் இறைபணியில் மாற்றப்பட்டவன் ஒநேசிமு

உதவாக்கரை என்று பெயர் பெற்று வாழ்கிறீர்களா? அல்லது உன்னை ஏன்தான் பெற்றேனோ என்று எண்ணும் பெற்றோர்களா? இவனால் எந்த பயனும் இல்லையே என்று ஏங்குகிறவர்களாய் இருக்கிறீர்களா? கவலையே வேண்டாம் சுவிசேஷத்திற்கு செவிகொடுத்தால் பயனற்றவனை பயனுள்ளவனாக மாற்றுமே.

**சுவிசேஷம் பிரயோஜனமில்லாதவனை பிரயோஜனமுள்ளவனாக மாற்றும் வல்லமை உள்ளது.**

**3. எபே 12:13**

தூரமாக இருந்தவர்கள் அல்லது இருப்பவர்கள் யார் என்றால் இயேசுவோடு சம்பந்தம் இல்லாதவர்கள் அந்நிய தேவனை வணங்குகிறவர்கள் மற்றும் கிறிஸ்துவோடு நேரடியாக ஜெபிக்காமல் இடைத்தரகர்கள் மூலம் (ஊழியர்கள்) காரியத்தை நடப்பிக்கிறவர்கள் ஆனால் சுவிசேஷத்தின் மூலம் அதாவது இயேசுகிறிஸ்து உனக்காக எனக்காக பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்தவர் என்கிற வார்த்தை நம்மை அவரோடு கிட்டிச்சேரவும், அவரோடு உறவு கொள்ளவும் வைக்கிறது.

**சுவிசேஷம் நம்மை அவருடன் நெருக்கமாக வாழும் சிலாக்கியத்தை உண்டுபண்ணி கொடுக்கிறது.**

## உங்கள் கவனத்திற்கு

**இந்திய நேரப்படி தினந்தோறும் இரவு 8.00 மணி முதல் 8.30 மணி வரை www.livingjesus.tv என்ற Web Tv - யிலும் புதன்தோறும் இரவு 9.00 மணி முதல் 9.30 மணி வரை www.jtktv.org என்ற Web TV- யிலும் சகோதரரின் செய்தியை பார்த்து பயனடையுங்கள்.**

## சிந்தனை துளிகள்

1. தேவனால் அங்கீகரிக்கப்படும் வாழ்வே மனிதனால் புகழப்படும் வாழ்வை விடச் சிறப்பானது.
2. சோதனைகளும், பாடுகளும் மாறுவேடம் அணிந்த ஆசீர்வாதங்களே.
3. தேவனை வெறுக்கிறவர்கள் தங்கள் ஆத்துமாக்களை வெறுக்கிறார்கள் என்பதே பொருள்.
4. நாம் பிதாவோடு வாழ கிறிஸ்து நம்மோடு வாழ வந்தார்.

# உண்மையான தீர்க்கதரிசியை மற்றும் தீர்க்கதரிசனத்தை அடையாளம் காணுவது எப்படி?

தீர்க்கதரிசனம் என்ற வார்த்தையையும், தான் ஒரு தீர்க்க தரிசன வரம் பெற்ற ஊழியர் என்று கூறுகிற ஊழியரின் வார்த்தையையும், அவர் சொன்னால் சரியாகத் தான் இருக்கும் என்ற மக்களின் வார்த்தையையும் இப்பொழுது சரளமாக கேட்க முடியும். **தீர்க்கதரிசனம் என்பது ஆண்டவர் சார்பாக அவர் கூற விரும்பும் வார்த்தைகளை கூறுவதுதான் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.** எரே 23:14ன் படி “எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன். விபசாரம் பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டு திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளை திடப்படுத்துகிறார்கள், அவர்கள் எல்லாரும் எனக்கு சோதோமைப் போலும் அதின் குடிகள் கொமோராவைப் போலும் இருக்கின்றார்கள். எரே 23:25,26 சொப்பனங்கண்டேன். சொப்பனங்கண்டேன் என்று என் நாமத்தைச் சொல்லி பொய் தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கத்தரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன். எதுவரைக்கும் இப்படி இருக்கும்? பொய் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்த்தரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ? இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கத்தரிசனமாகச் சொல்லுகிறார்கள். எரே 23:22. இதோ பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கத்தரிசனமாகச் சொல்லி அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்கு கற்பித்ததுமில்லை. அவர்கள் இந்த ஜனத்திற்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு முறை எனக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் அன்பு சகோதரர் சபை ஊழியராகவும் இறைபணி செய்து வருகிறார். ஒரு ஞாயிறு ஆராதனைக்காக ஒரு ஊழியர் ஒருவர் வந்தாராம். செய்தி நேரம் முடிந்தவுடன் ஜெபம் செய்தாராம். ஜெபத்தில் நிறைய பெயர்களை சொல்லி அழைத்து ஒவ்வொரு பெயரை சொல்லும் போதும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான காரியத்தைக் கூறினாராம். ஒவ்வொரு பெயராய் சொல்ல சொல்ல எனது நண்பருக்கு என்னச் செய்வதென்று தெரியவில்லை. காரணம் அவர் கூறின பெயர்களில் ஒன்று கூட ஆலயத்திற்குள் இருக்கும் மக்களின் பெயராகவோ, சபையில் சங்கம் எழுதின மக்களின் பெயராகவோ அல்லது அந்த ஊரில் உள்ள மக்களின் பெயராகவோ இல்லை என்று அறிந்து மிகவும் வேதனைப்பட்டார். ஆராதனை முடிந்தவுடன் நேரிடையாகவே அந்த ஊழியரிடம் சம்பந்தமே இல்லாத பெயர்களையெல்லாம் ஜெபத்தில் கூறினீர்களே, நீங்கள் கூறின பெயர் ஒன்றும் ஆலயத்தின் உள்ளேயோ, வெளியேயோ இல்லையே என்று கூறினாராம். அதற்கு அந்த ஊழியர் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் இப்படி ஏதாவது ஒன்றை சொல்லாவிட்டால் என்னை ஊழியன் என்று யாரும் ஏற்றுக் கொள்வதில்லை இப்படி ஏதாவது கூறினால் தான் தன்னை பெரிய வல்லமையான ஊழியன் என்று எண்ணிக் கொள்வார்கள் என்று கூறினாராம்.

எரே 29:8,9 மேலும் உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம் போக்கவொட்டாதிருங்கள், சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். நான்



அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். பல ஆண்டுகளாக நான் ஆங்காங்கே கண்ட, கேட்ட தவறான தீர்க்கதரிசனங்களால் பலர் ஏமாற்றப்பட்டதும், வஞ்சிக்கப்பட்டதுமாய் இருப்பதினாலும் ஜனங்கள் தீர்க்க தரிசனங்களையும், தீர்க்கதரிசி என்கிற நினைப்பில் செயல்படும் ஊழியர்களையும் அடையாளம் கண்டு கொள்ளச் செய்யவேண்டும் என்கிற பாரத்தை கர்த்தர் அருளிச் செய்வதினால் இந்த இதழில் இவற்றைக் குறித்து எழுதும் நினைவைக் கொடுத்தார். யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில் அல்ல தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஊழியர்களுக்கு பின்னால் அடிக்கப்படுகிற ஆட்டுக் குட்டியைப் போல ஓடிக் கொண்டிருக்கும் ஜனங்களின் எண்ணங்களை ஆண்டவருக்கு நேராக திரும்பச் செய்ய வேண்டும் என்பது தான் எனது நோக்கம். தொடர்ந்து வாசித்து வேத வசனத்தின் மூலம் தெளிவை பெற்றுக் கொள்ள கர்த்தர் உதவிச் செய்வாராக. நான்கு தீர்க்கத்தரிசியைக் குறித்தும் அவர்களது தீர்க்கத் தரிசனத்தைக் குறித்தும் தெளிவாக புரிந்து கொள்ள கர்த்தர் உதவி செய்வாராக.

1) 2இரா20:1 – “அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான், அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கத்தரிசி அவனிடத்தில் வந்து அவனை நோக்கி நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும் நீர் பிழைக்கமாட்டீர், மரித்து போவீர் என்று கர்த்தர் சொல்கிறார் என்றான்”. இந்த வசனத்தில் எசேக்கியா என்கிற ராஜாவுக்கு ஏசாயா என்கிற தீர்க்கதரிசி தீர்க்கத்தரிசனம் உரைக்கிறான். தனக்கு வியாதி வந்தவுடன் தன்னுடைய வியாதியை குறித்து தெரிந்து கொள்ள தீர்க்கத்தரிசியை தேடியோ அல்லது அவர் சொல்லி விட்டோ தீர்க்கதரிசி அவரிடம் வரவில்லை. இக்காலத்தில் தீர்க்கதரிசி என்று சொல்லிக் கொள்பவர்களிடம் தேடிச்சென்றுதான் தீர்க்கதரிசனம் கேட்கின்றனர். அல்லது பிலேயாம் தீர்க்கதரிசியை போல் கூலிபொருத்தி (காணிக்கை கொடுத்து) வரவழைக்கின்றனர். ஏசாயா தீர்க்கதரிசி ஆண்டவர் சொன்னதை சொல்கிறார். எசேக்கியா உலக அதிகாரம் நிறைந்தவன். ஏசாயா தேவ வல்லமை நிறைந்தவர். ஏசாயா மாம்சத்தில் நினைத்திருந்தால் ஒரு ராஜாவிடம் இந்த வார்த்தைகளை எப்படி கூறுவது என்று எண்ணியிருப்பான். நல்ல காரியமாக இருந்தால் பரவாயில்லை, நீர் பிழைக்க மாட்டீர், மரித்து போவீர் என்று எப்படி சொல்வது அப்படி சொன்னால் நம்மை என்ன நினைப்பார், கோபப்பட்டால் என்ன செய்வது, தவறாக நினைப்பாரோ என்றெல்லாம் எண்ணியிருந்தால் அவரால் கூறியிருக்க முடியாது, ஆனால் ஏசாயா தீர்க்கதரிசியோ ராஜாவாக இருந்தாலும், சகல அதிகாரம் படைத்த ஆளுகை செய்கிறவர்களாய் இருந்தாலும் சரி கர்த்தர் என்ன சொல்லச் சொல்லுகிறாரோ அதையே சொன்னார். அப்படியானால் அவர் தைரியமானவராக இருந்தார். ஆண்டவருடைய வார்த்தையை மட்டும் கூறுவதில் உறுதியானவராக இருந்தார். எந்த எதிர் விளைவையும் பற்றி சிந்திக்காமல் ஆண்டவர் சொல்வதை சொன்னார். அப்படியானால் உண்மையான தீர்க்கதரிசி ஆண்டவர் கூறுவதை மட்டுமே கூறுவார். அப்படி ஆண்டவர் கூறுவதை மட்டும் கூறினால் என்ன நடக்கும் என்பதையும் இந்த சம்பவத்தினால் அறிந்து கொள்ளலாம். உண்மையான தீர்க்கதரிசியின் வார்த்தையைக் கேட்டவுடனே எசேக்கியா ராஜா தீர்க்கனின் மீது கோபப்படவில்லை, எரிச்சலடையவில்லை, எப்படி என்னைப் பற்றி இப்படிக் கூறலாம் என்று கடிந்து கொள்ளவில்லை மாறாக 2 இரா 20:2,3 – அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்புறமாகத் திருப்பிக் கொண்டு, கர்த்தரைநோக்கி ... எசேக்கியா மிகவும் அழுதான். எசேக்கியா உடனடியாக ஆண்டவரை நோக்கி ஜெபம் பண்ணினான். “உண்மையான தீர்க்கதரிசனம் உங்களுக்கு நேராகவரும் எனில் நீங்கள் உங்கள் இருதயத்தை ஆண்டவருக்கு நேராகத் திருப்புவீர்கள். எசேக்கியா ஏசாயாவினிடத்தில் எனக்காக ஆண்டவரிடத்தில் பரிந்து பேசும் என்று கேட்கவில்லை அப்படிசெய்யாமல் தேவனை நோக்கி ஜெபித்தான். இது மிக மிக முக்கியமானது.

**இரண்டாவதாக** 2 சாமு 12:7–12 அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி,

நீயோ அந்த மனுஷன், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்... என்று சொன்னான்.

தாவீது ஒரு ராஜா. நாத்தான் ஒரு தீர்க்கதரிசி. 2 சாமு 12:1 ல் கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார். தாவீது எத்தனை காரியங்களில் கர்த்தரை சார்ந்து இருந்தாலும் ஒரு பெண் விஷயத்தில் தவறிவிட்டான். அப்படித் தவறும் போதுதான் அந்தத் தவறை சுட்டிக்காட்ட ஆண்டவர் நாத்தானை அனுப்பினார். நாத்தானும் ஒரு அதிகாரம் பெற்ற ராஜாவினிடத்தில் தைரியமாக தவறைச் சுட்டிக் காட்டினார். அவர் சொன்னதில் முக்கியமானது ''நீயே அந்த மனுஷன்'' நேரடியாகவே ராஜாவிடம் கூறுகிறார். உம்மைப் பற்றி இப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள் என்று பேசாமல் நீ தவறிவிட்டாய், தவறு செய்தவன் நீ தான் என்று தைரியமாகக் கூறினார். இப்படிப்பட்ட தவறுகளை துணிகரமாய் செய்யும் மக்களிடத்தில் இக்கால தீர்க்கத்தரிசிகள் இப்படி கூறுவதை நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவர்களது உதவி நின்றுவிடுமோ அல்லது அவர்களது ஒத்துழைப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற பயத்தில் கூறாமல் நமக்கு எதற்கு வீண் வம்பு என்று ஒதுங்கிக் கொள்ளுகிற உலகத்தில் வாழுகிறோம்.

இந்த சம்பவத்தில் தாவீது நாத்தான் மேல் கோபமோ, எரிச்சலோ அடையவில்லை. மாறாக 2 சாமு 12:13ல் ''அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில் நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றான்'',

தன்னைப் பற்றிய அந்தரங்க விஷயங்கள் இவனுக்கு தெரிந்துவிட்டதே என்று ஆதங்கம் கொள்ளாமல் உடனடியாக தனது தவறைச் சரி செய்து கொண்டான். நான் பாவம் செய்தேன் என்று தனது தவறை ஒத்துக் கொண்டான். உண்மையான தீர்க்கதரிசனம் நமக்கு நேராய் வரும் எனில் அது நம்மைச் சரி செய்யும். நமக்கு பாவ உணர்வைக் கொண்டு வந்து அந்த தவறுக்காக ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்போம். எனது அந்தரங்கக் காரியங்களைக் கூறுவதற்கு நீ யார் என கூறமாட்டோம். அப்படியானால் ஆண்டவர் உண்மையாகவே நம்மைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தால் நாம் நம்மை பரிசுத்தமாக்கப் படுவதற்கு முக்கியத்துவம் கொடுப்போம். இக்காலத்தில் இதைக் காண முடிவதுமில்லை. இப்படிபட்ட தீர்க்கத் தரிசனம் உரைக்கப்படுவதுமில்லை. எச்சரிகையுடன் காணப்படுவோம். ஞானத்தோடு செயல்படுவோம், வேத அறிவோடு சரியான பாதையில் செல்வோம். அப்போது நாம் ஏமாறமாட்டோம். யாரும் ஏமாற்றவும் முடியாது.

**மூன்றாவதாக** 2 இராஜா 5:15,16–அப்பொழுது அவன் (நாகமான்) தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு (எலிசா) முன்பாக நின்று, இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன். இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றான்.

அதற்கு அவன் நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான், வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணி விட்டான்.

எலிசா என்பவர் ஒரு நல்ல தீர்க்கதரிசி, ஆண்டவரை மட்டும் சார்ந்து செயல்பட்டவன். ஒருமுறை சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமானுடைய குஷ்டம் எலிசா சொன்ன வார்த்தையின் படி யோர்தானில் ஏழுதரம் மூழ்கி அருமையான சுகத்தைப் பெற்றுக்கொண்டான். தான் சுகமாகுவதற்காக எலிசா வேறுவகையான காரியங்களைச் சொல்வான் என்று எதிர்பார்த்தான். எலிசாவும் ஒரு முக்கியப் பொறுப்பில் உள்ள எதிர்நாட்டுப் படைத்தலைவனிடம் கொஞ்சம் கூட அவனை எட்டிப்பார்க்காமல் முகஸ்துதிப் பண்ணாமல் யோர்தானில் மூழ்கச் சொல்லிவிட்டார். சுகம் பெற்ற நாகமானோ உடனடியாகவே இஸ்ரவேலின் தேவனே மெய் தேவன் என்று அறிக்கைபண்ணி தான் சுகமாவதற்கு காரணமாமயிருந்த எலிசாவினிடத்திற்கு வந்து காணிக்கையை அவருக்கு கொடுக்க முன்வந்தான். காணிக்கை வாங்கும் தகுதி எலிசாவுக்கு இருந்தாலும் அதை தட்டுதல் பண்ணிவிட்டான். அப்படியானால்



**ஒரு உண்மையான தீர்க்கதரிசி இழிவான ஆதாயத்தை விரும்பாமல் அதை தட்டுதல் பண்ணிவிடுவான்.** இக்கால தீர்க்கதரிசியாக இருந்தால் தாங்கள் கட்டப்போகும் தோட்டத்திற்கோ, கூடாரத்திற்கோ, வீட்டிற்கோ, ஜெப கோபுரத்திற்கோ பயன்படுமே என்று சொல்லி ஏதாவது ஒரு பகுதியை நீங்கள் தாங்குங்கள் என்று அவர்களாக தருவதை தவிர கூடுதலாகவும் கறந்து விடுவார்கள். **ஒரு உண்மையான தீர்க்கதரிசி ஒரு நாளும் தனது தேவையை குறித்தோ தனது ஊழியத் தேவையை குறித்தோ நேரிடையாக கூறுவதையோ அல்லது தொலைக்காட்சி வாயிலாக கூறுவதையோ அல்லது பத்திரிக்கை வாயிலாக விளம்பரப்படுத்துவதையோ விரும்பமாட்டார்கள்.** எனக்கு பல ஊழியர்களின் பத்திரிக்கைகள் வந்து கொண்டு இருக்கிறது. அதில் பெரும்பாலான மக்களால் பெரிய ஊழியர்கள் என்று எண்ணுகிறவர்களின் பத்திரிகைகளில் தேவைகளைக் குறித்த விளம்பரங்கள் பல பக்கங்களில் உண்டு. அதே நேரத்தில் நிறைய மிஷினரி இயக்கத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் வருகிறது. அதில் கர்த்தர் தங்களது தேவைகளை கர்த்தர் எப்படியெல்லாம் சந்தித்தார் என்பது போன்ற செய்திகள் உண்டு. மாதந்தோறும் 50 அல்லது 100 அல்லது 1000 தாங்கக் கூடிய இத்தனை நபர்கள் தேவை என்பதைப் பற்றி கூறுவதே இல்லை. ஆனாலும் அனைத்து மிஷினரி இயக்கங்களையும் ஆண்டவர் நடத்துகிறாரே. மிஷினரி இயக்கங்கள் எந்த ஒரு தனிநபருக்கும் சொந்தமானதல்ல. ஆனால் தேவனுடைய வீடு, ஜெப கோபுரம், ஜெபத்தோட்டம், ஜெபகூடாரம் சில தனி மனிதர்களின் அசையா சொத்துக்களாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட செயல்கள் செய்கிறவர்கள் பெரும்பாலும் தீர்க்கதரிசன ஊழியர்களே. ''உண்மையான தீர்க்கதரிசி பணத்தை (காணிக்கையை) மேன்மையானவையாக எண்ணமாட்டான்''. மிகுந்த கவனத்தோடு செயல்பட கர்த்தர் அழைக்கிறார். சில வருடங்களுக்கு முன் ஒரு ஊழியரோடு பேசிக் கொண்டு இருந்தேன். அவர் தான் தீர்க்கத்தரிசன வரம் பெற்றவர் என்று கூறிக்கொள்பவர். என்னிடம் கூறும்போது சகோதரரே நான் உங்களுக்கு ஒரு ஆலோசனைச் சொல்கிறேன் அது என்னவெனில் உங்களுக்கு வரும் வருமானத்தின் தசமபாகங்களை தீர்க்கதரிசனம் கூறும் ஊழியருக்கு அனுப்புங்கள். 6 மாதத்திற்குள் நீங்கள் பயங்கரமான வளர்ச்சி பெறுவீர்கள் ஏனெனில் உங்களது காணிக்கை அவ்வூழியரின் கையில் கிடைக்கும் போதெல்லாம் உங்களுக்காக ஜெபத்தை ஏறெடுப்பார். அப்போது ஆண்டவர் உங்களைப் பற்றி அவரோடு பேசுவார். அவர் அதை உங்களுக்கு அறிவிப்பார். இப்படி செய்து பாருங்கள் உங்களது உயர்வு வேகமாக இருக்கும் என்று கூறினார். ஆண்டவரை ஏற்றுக் கொள்ளாமல் துன்மார்க்கமாய் வாழ்ந்து துணிகரமாய் பணங்களை சம்பாதிக்கும் மனிதர்களிடம் இப்படி ஒரு காரியத்தைச் சொன்னால் பணத்தை குவித்து விடுவார்கள். அனால் அவர்களது ஆத்துமாவில் அல்லது அவர்களது வாழ்வில் எந்த மாற்றமும் இருக்காதே.

நான் இப்படிப்பட்ட காரியங்களுக்கு எதிரானவன் என்று அவருக்கு தெரியாது. வீணான வாக்குவாதங்களுக்கு இடங்கொடாமல் அவருக்காகவும் அவரைப்போன்றவர்களுக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். ஜனங்களின் காணிக்கையை பெற்றுக் கொள்வதற்காகவே தீர்க்கத்தரிசனம் கூறிக் கொண்டிருக்கும் தீர்க்கத்தரிசிகளை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். ஆண்டவர் சார்பாக கூறும் தீர்க்கனின் வார்த்தை மிகவும் உண்மையாய் இருக்கும். எலிசா நாகமானைப் பார்த்து யோர்தானில் ஏழுதரம் மூழ்கி எழுந்தால் சுகமாகும் என்று சொன்ன வார்த்தையை நாகமான் நம்பவில்லை. மாறாக கோபம் எரிச்சல் போன்றவை வந்தது. ஆனால் அவன் ஊழியக்காரர்களின் தொந்தரவால் மூழ்கினதால் எலிசா தீர்க்கதரிசியின் வார்த்தயின்படி சுகம் பெற்றான். நாகமானுக்கு விசுவாசம் கிடையாது. ஆனால் எலிசா என்ற உண்மையான தீர்க்கனின் வார்த்தை மிகவும் சரியானதாக இருந்தது. (இக்கால தீர்க்கத்தரிசிகள் இதை கவனிக்கவும்),

ஆண்டவர் கூறுவிரும்பும்

வார்த்தையை பேசுகிறவனே உண்மையான தீர்க்கத்தரிசி.


**நான்காவது** 2 நாளா 16:9 “தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்குளம் உலாவிக் கெண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் மதி இல்லாதவராய் இருந்தீர். ஆகையால் இது முதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான். இந்த வார்த்தை 2 நாளா 16:7ல் கூறப்பட்ட ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி என்று சொல்லும் தீர்க்கன் ஆசா என்ற ராஜாவை பார்த்துக் கூறியது, ஒரு இராஜாவைப் பார்த்து இந்த விஷயத்தில் மதியில்லாதவராய் இருந்தீர். அப்படியானாலும் இந்த விஷயத்தில் உமக்கு அறிவில்லாமல் போய்விட்டதே என்று கடினமான வார்த்தையை பயன்படுத்தினான். தைரியமாக கூறினான். ஏனெனில் ஆசாவைப் பற்றி 2 நாளா 14, 15 அதிகாரங்கள் மிகத் தெளிவாக அவர் ஆண்டவரை மட்டுமே சார்ந்து எப்படிகாரியங்களை ஜெயமாக முடித்தார் என்பதைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. அப்படிப்பட்ட ராஜாவாகிய ஆசாவை பார்த்து அறிவில்லாமல் செய்துவீட்டீரே என்று கூறினான். அப்படிக் கூறுவதற்கான காரணம் என்னவெனில் பல பிரச்சனைகளில், பல போராட்டங்களில், பல எதிர்ப்புகளில் ஆண்டவரையே நம்பியிருந்து காரியத்தை ஜெயமாக முடித்தீரே இந்த விஷயத்தில் எந்தவிஷயம் என்று 2 நாளா 16ம் அதிகாரம் முதலாம் வசன முதல் வாசித்துப்பார்த்தால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஆசாவிற்கு விரோதமாக பாஷா வந்தான். அவனோடு யுத்தம் செய்ய தனக்கு உதவிக்காக அடியாட்களை பயன்படுத்துவதுபோல சீரியாவின் ராஜாவை நிறைய பொக்கிஷங்களைக் கொடுத்து அவனது உதவியோடு யுத்தம் செய்தான். இப்படி தனக்கு ஆதரவாக சீரியாவின் ராஜாவை வைத்துக் கொண்ட விஷயம்தான் அறிவில்லாத காரியமாக இருந்தது. ஒருமுறை ஒரு போதகரோடு பேசிக்கொண்டு இருக்கும்போது அவர் கூறினார். அண்ணே நீங்கள் கூறுவது போன்று இக்காலத்தில் நான் இருந்தால் என்னை பந்தாடியிருப்பார்கள். நான் ஒரு அணியில் உறுதியாக இருக்கிறபடியால் எதிரணியால் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறினார். **தங்களுக்கு மாறுதல் வந்து விடக்கூடாது, தங்களது மனைவி வேலைபார்க்கும் இடம் நகர்புறமாகவே இருக்க வேண்டும் என்று எண்ணுகிற போதகர்கள் கர்த்தரை சார்ந்து கொள்ளாமல் ஒன்று பேராயரை அல்லது லே மக்களையோ சார்ந்து கொண்டு தாங்கள் புத்தியீனமாக காரியத்தை வெளிப்படுத்தகின்றனர்.** காரணம் ஆண்டவர் எனக்கு போதும், அவரில்லாமல் எதுவும் நடப்பதில்லை என்கிற நம்பிக்கை குறைந்து போய்விட்டது. ஒரு போதகர் கூறினார் அண்ணே நான் இப்போது Ordination கொடுக்கப்படுமுன் நன்கு ஊழியம் செய்கிறேன் Full Ordination கிடைத்த பின்னும் இப்படியிருப்பேனோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது என்றார். நான் கூறினேன் எல்லா நிலையிலும் கர்த்தரை சார்ந்து கொள்ளுங்கள் அப்போது கர்த்தர் உங்களை மகிமையாக நடத்துவார். ஆண்டவரை மட்டும் சார்ந்து கொண்டு ஊழியம் செய்பவர்கள் எந்த நிலையிலும் எந்த மனிதர்களுக்கும் அடிமையாக இருக்க மாட்டார்கள். அவர்கள் மூலம் உரைக்கப்படும் தேவனுடைய வார்த்தை கர்த்தர் விரும்புகிறபடி செயல்படும். எனவே நாம் உண்மையான தீர்க்கதரிசிகளையும், தீர்க்கதரிசனத்தையும் அடையாளம் கண்டு கிறிஸ்துவை கவனமாக பின்பற்றுவோம். ஆசா தேவ சத்தத்தைக் கேட்டும் பின் நாட்களில் சரியான வாழ்வு வாழவில்லை. ஒரு காலத்தில் ஆண்டவரோடு வாழ்ந்தோர் இப்போது அப்படியில்லை என்று நீங்கள் உணருவீர்களே எனில் இதையே தீர்க்கதரிசன செய்தியாக ஏற்றுக்கொண்டு தவறுகளை சரிசெய்து கர்த்தரையே சார்ந்து கொள்வோம். கர்த்தர் நம்மை வழிநடத்துவாராக.

சிந்தனை துளிகள்

**இயேசு கிறிஸ்துவை ஆராதிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டு உலக வாழ்வில் திருப்தியில்லாமல் வாழ்பவன் உண்மையான கிறிஸ்தவன் அல்ல.**








# கற்றுக் கொள்ளுங்கள்

சகோ.R.சுந்தரராஜன், ஆழ்வாநேரி

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப தம்பி தங்கைமாரே, மூன்று மாத இடைவெளிக்குப் பின் இந்த இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் தாமே உங்கள் காரியங்கள் அனைத்தையும் வெற்றியாக மாற்றித் தருவாராக.

உலகிலே மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவருமே கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. நம் பெற்றோர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர் மூலமாகவோ, உடன் பணியாற்றுபவர்கள் மூலமாகவோ நாம் கற்றுக் கொள்கிறோம்.



சில சமயங்களில் சில புத்தகங்கள் முலமாகவும், விஞ்ஞான வளர்ச்சியினாலே சில தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் நாம் கற்றுக் கொள்கிறோம். உலகத்தில் எழும்பியுள்ள போட்டிகளை சமாளிக்க அனுதினமும் நாம் நம்மை தயார்படுத்த நாம் கற்றுக்கொள்கிறோம். ஒரு கிறிஸ்தவன், அதாவது கிறிஸ்துவை உடையவன் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் வேதத்தில் பல உண்டு. யாரிடமும் கற்றுக்கொள்ளலாம் என்றால் அவர் தாம் நம் தலைவரும் ஆசிரியருமான இயேசு கிறிஸ்து. ஏனென்றால் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார். (1பேதுரு 2:21)

## 1) போய்க் கற்றுக்கொள்ளுங்கள்

மத் 9:13 பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார், போய்க் கற்றுக் கொள்ளுங்கள் என்று. நாமோ பொய்யைக் கற்றுக் கொள்கிறோம். பொய்யான மாயையைக் கற்றுக் கொள்கிறோம். அதனால் தான் போய்க் கற்றுக்கொள்ளச் சொல்கிறார். எங்கு போவது? சத்திய வேதாகமத்தின் வழியாக போகச் சொல்கிறார். பொய்யான பலியையல்ல, மெய்யான இரக்கம் இன்ன தென்று கற்றுக் கொள்ளச் சொல்கிறார். ஓசியா 6:6 இவ்விதமாக கூறுகிறது.

“**பலியை அல்ல, இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்**”. இங்கு வெளிப்படையான ஆராதனை, காணிக்கை கொடுத்தல், அன்னிய பாஷைகளை பேசுதல், துதி ஆராதனை என்ற பெயரில் நடக்கும் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் போன்றவைகளைக் காட்டிலும் உள்ளத்தில் இரக்க சிந்தையை உடையவர்களைத் தான் நான் விரும்புகிறேன் என்று கூறுகிறார். அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக நாம் இரக்கம் கொள்கிறோமா? “இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்”. அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத் 5:7) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் கூறினாரே. இதன் அர்த்தத்தை உண்ந்தவர்களாக ஏதோ கிறிஸ்தவர்கள் என்றால் மாய்மாலக் காரர்கள் என்று புறஜாதியார் நம்மை நினைக்காதவாறு நாம் அவர்களை இரட்சிப்புக்குள் நடத்த உழைப்போம். உதவி செய்வோம். இதற்காகத் தானே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும இப்பூவுலகிற்கு மானிடனாகப் பிறந்தார். அவருடைய ஏக்கம் நமதாகட்டும். அவர் விட்டுச் சென்ற அந்தப் பணியை நாம் நம்முடைய இரக்கத்தினால் நாம் செய்வோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்கிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (1 யோவா 2:6)

## 2) என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். மத் 11:29.

சாந்தத்தையும், தாழ்மையையும் நாம் அவரிடமே கற்றுக் கொள்ள விரும்புகிறார். ஒரு வேளை நாம் சாந்தத்தையும், தாழ்மையையும் எந்த ஒரு மனிதனிடமிருந்து கற்றுக் கொள்வோமானால் அந்த மனிதன் தவறும் பொழுது நாமும் தவறிப்போக வாய்ப்புகளுண்டு. சாந்தகுணமுள்ள மோசே கூட கோபப்பட்டு கன்மலையை அடித்தாரே. ஆதலால் நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமே கற்றுக் கொள்ள வேண்டும். "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரிப்பார்கள்" என்று மத் 5:5 ல் கூறினாரே. மேலும் மரண பரியந்தம் தன்னைத் தாழ்த்தினாரே. தாழ்மையுள்ளவனுக்குக் கிருபை அளிப்பேன் என்றும் மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் என்றும் பேதுரு தனது முதல் புத்தகம் 5:5ல் கூறுகிறாரே. இந்தத் தாழ்மையை நாம் நம்முடைய மனதில் அணிந்து கொள்ள விரும்புகிறார். வெளிப்பிரகாரமாக அல்ல, காவி வேட்டி உடுத்தி கதர் சட்டை அணிந்து, வாயில் பொய்யான Praise the Lord என்றோ, ஸ்தோத்திரம் பிரதர், ஸ்தோத்திரம் சிஸ்டர் என்றோ அழைக்க அல்ல, உண்மையான தாழ்மை நம்முடைய ஆவியிலே, ஆத்மாவிலே காணப்பட வேண்டும். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது என்று மத் 5:3ல் வாசிக்கிறோம். அவரிடம் நாம் கற்றுககொள்ளும் சாந்தமும், மனத்தாழ்மையையும் நம்முடைய வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தும் போது அதாவது நடைமுறைப்படுத்தும் போது நம்முடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று மத் 11:28ல் வாக்குப் பண்ணியிருக்கிறாரே. பாரமான காரியங்களான பெருமை, அகந்தை, முரட்டாட்டம், கீழ்ப்படியாமை போன்றவற்றை இறக்கி வைத்து விட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நுகத்தையும், சுமையையும் அதாவது சாந்தத்தையும், மனத்தாழ்மையையும் ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள்வோம். நாம் இளைப்பாறுதல் அடைவோம். இளைப்பாறுதல் இல்லாமல் அலைந்து திரிந்து அல்லல் படும் மாந்தர்களை அவருடைய மந்தையில் சேர்ப்போம். அவருடைய கற்பனைகள் பாராமானவைகளல்லவே. (1 யோ 5:3)

## 3) ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்

மத் 24:32, அத்திரமத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்.

முதலில் வேதத்தில் போய்க் கற்றுக் கொள்ளச் சொன்ன தேவன், இரண்டாவது அவரிடமே கற்றுக் கொள்ளச் சொன்ன தேவன், இப்பொழுது ஒரு உவமையை அத்திமரத்தின் மூலம் கற்றுக் கொள்ளச் சொல்கிறார். கிட்டத்தட்ட 40 உவமைகள் மூலம் தன்னுடைய சீடர்களுக்கு விளக்கிக் காட்டின கர்த்தர் அத்திமரத்தின் மூலமாக கற்றுக் கொள்ளச் சொல்கிறார். இஸ்ரவேல் தேசம், வேதத்திலே திராட்சைச் செடியாகவும் அத்திமரமாகவும் உவமையாகக் கூறப்படுவதுண்டு. கர்த்தர் விரும்பின கனிகள் திராட்சைச் செடியிலிருந்து கிடைக்கவில்லை. அதனால் புதிய ஏற்பாட்டிலே அத்திமரத்தை இஸ்ரவேல் தேசத்திற்கும், திராட்சைச் செடியை இயேசு கிறிஸ்துவுக்கும் உவமையாக்கப்படுவதை நாம் காணலாம். சரி நீங்கள் கேட்கலாம். அத்திமரத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியம் என்ன இருக்கிறது. அதிலே இளங்கிளை தோன்றி துளிர்விடும் போது, வசந்தகாலம் சமீபமாமயிற்று என்று அறிவீர்கள்.

நாம் எல்லோரும் அறிந்தபடி இஸ்ரவேல் தேசம் யூதர்களுக்கு 1948ம் ஆண்டில் உருவானதை அறிவீர்கள். இஸ்ரவேல் தேசத்தை அறியுமுன் இஸ்ரவேல் ஜனங்களை நாம் அறிய



முற்படுவோம். எகிப்திலே அடிமையாயிருந்த அவர்களை மோசேயின் மூலமாக வனாந்திர பாதைகளின் வழியாக கானான் தேசத்திற்குள் வழிநடத்தினார். யோசுவா மூலமாக அவர்கள் தேசத்தை சுதந்தரித்தார்கள். இவர்கள் என்னுடைய ஜனங்கள். இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள் என்று இவர்களைக் குறித்து கூறிய வாக்கியங்கள் இவை. தங்களுடைய கீழ்ப்படியாமையினாலே, அவர்கள் தேவனுக்கு விரோதமாக நடந்து கொண்டதினால் அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட அத்திமரம், ஒரு பட்டுப்போன சூழ்நிலை, வரலாறு தெரிந்த அனைவருக்கும் தெரிந்த ஒன்று. கி.பி,70ல் அவர்கள் அந்த தேசத்தில் இருந்து விரட்டப்பட்டனர். மீண்டும் ஏதேதோ முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் 1948 வரை அவர்களால் அவர்களுக்கென்று இஸ்ரவேல் தேசத்தை அடையக்கூடாமல் போயிற்று. இப்பொழுது இஸ்ரவேல் தேசம் உருவாக்கப்பட்டது. அதாவது இளந்துளிர் துளிர்த்து விட்டது. வசந்தகாலம் சமீபமாமயிற்று என்று அத்திமரத்தின் முலம் அறியலாயிற்று. இவைகள் எல்லாம் சம்பவிக்கும் போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார். (மத் 24:33) என்று நாம் அறிந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அதாவது அவரது இரண்டாம் வருகை வெகு சமீபமாயிருக்கிறது. என்பதே இதன் அர்த்தம். இஸ்ரவேல் மக்களைப் போல நம்மை அவர் தெரிந்து கொண்டதினால் அவர்களைப் போல அல்லாமல் அவருக்கு உகந்த ஜனங்களாய் நாம் வாழ வேண்டியது அவசியமாயிருக்கிறது. இன்னும் முதல் வருகையைக் குறித்தே அனேக ஜனங்கள் அறியாதிருக்கிற இவ்வேளையில் தானே, நாம் இன்னும் அவருடைய மந்தைக்கு ஆடுகளைக் கொண்டு சேர்க்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கை நமக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்திரமத்தின் முலம் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளச் சொல்கிறது. வேதத்தில் போய்க் கற்றுக் கொள்ளச் சொல்லும் ஆண்டவர், தன்னிடம் கற்றுக் கொள்ளச் சொல்லும் ஆண்டவர், நாம் எச்சரிப்பாக இருப்பதற்கு, இஸ்ரவேல் ஜனங்களிடம் அதாவது அத்திமரத்தின் மூலமாக நம்மை கற்றுக் கொள்ளச் சொல்கிறார். இவைகளை நினைப்பூட்டுவதற்காக, பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளிச் செய்வதற்காக அவரே பிதாவிடம் வேண்டுபவராகவும் இருக்கிறார். பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் நம்மோடு வாசம் பண்ணி நம்முடைய வாழ்வில் கிரியை செய்யும் செயல்கள் பல உண்டு.

- எல்லாவற்றையும் நமக்கு போதிப்பார் (யோவான் 14:26)
- இயேசுவின் சொற்களை நினைவுபடுத்துவார். (யோவான் 14:21)
- இயேசுவைக் குறித்துச் சாட்சி கொடுப்பார், (யோவான் 15:26)
- பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா 16:8)
- சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். (16:13)
- இயேசுவை மகிமைப்படுத்துவார். (யோவான் 16:14)

இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவரை நாம் நம் உள்ளத்தில் இருப்பவரை துக்கப்படுத்தாமல், நம்முடைய உள்ளத்தில் அவரை ஏற்றுக் கொண்டு, அவருடைய கற்பனைகளைக் கற்றுக் கொண்டு, இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவோம். சாட்சியாய் ஜீவிப்போம். சத்தியத்தில் நடப்போம். ஆமென்.

**சிந்தனை துளி**

**கிறிஸ்து எவரையும் தமது மந்தைக்குள் வலுக்கட்டாயமாகப் பிடித்திருக்க விரும்புவதில்லை. ஆனால், தம்மிடம் வந்த ஒருவரையும் ஒரு போதும் புறம்பே தள்ளுவதும் இல்லை.**

**சிந்தனை துளி**

எனது ஜெபங்கள் பல உடனடி பதிலைப் பெறாதபோது தேவன் அக்கறையற்றவர் என நினைத்தேன். ஆனால், அக்கறை மிகுதியால்தான் அவை தாமதமாயின என்பதை தாமதித்து தான் புரிந்தேன்.



# அதிகாலையிலே....

Sis.Y. **ஜோசப்பின்**,
D/o.S.யோசியா எட்வின் செல்லையா,
மூன்றடைப்பு



ட்ரிங்....ட்ரிங் என்று அடித்த அலார சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த சேகரின் கண்கள் கடிகாரத்தைப் பார்த்தபோது 5 மணி என்று கடிகார முள் காட்டியது. அந்த காலை நேரத்தில் சேகர் தன் படுக்கையை மடித்து வைத்து விட்டு பல்துலக்கியவுடன் முழங்கால்படியிட்டு கைகளைக் கூப்பி கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணினான். ஜெபத்தில் அவன் அந்த நாளில் படிக்க வேண்டிய பாடங்கள், செயல்களில் கர்த்தரின் பாதுகாப்பு மற்றும் ஆசீர்வாதங்கள் கிடைக்கும் படியாக ஜெபித்து வந்தான். சில நாட்களாக தொடர்ந்து அதிகாலை ஜெபம் செய்து வந்ததின் பலனாக அவனுடைய வழக்கமான செயல்களில் ஒன்றாக அதிகாலை ஜெபம் மாறியது. எவ்வளவு பாடங்கள் படிக்க வேண்டியது இருந்தாலும் பதட்டப்படாமல், பயப்படாமல் அதிகாலை ஜெபம் செய்து கர்த்தரையே நம்பி ஒவ்வொரு நாளையும் ஆரம்பித்தான்.

ஒரு நாள் பள்ளி மைதானத்தில் நண்பர்களுடன் சேகர் விளையாடிக்கொண்டிருந்தான், அப்பொழுது அங்கிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்து யாரோ... ஒரு பையன் தலைக்குனிந்து அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான். அருகில் சென்று ஏன் அழுகிறாய்? என்று பாசக் குரலில் சேகர் கேட்டான். ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்த அந்த முகம் தன்னுடைய நண்பன் ரவி என்பதால் என்னடா ஆச்சு யாரும் அடிச்சாங்களா, இல்லைனா வீட்டில் ஏதும் பிரச்சனையா சொல்லுடா என்று சேகர் கேட்கத் தொடங்கினான். சிறிது நேரம் ரவியின் பதிலுக்காக அமைதியான பார்வையில் சேகர் அமர்ந்திருந்தான். தன் பிரச்சனைகளை சேகரிடம் சொன்னால் மற்றவர்களிடம் போய் பரப்பி நம்மை கிண்டல் செய்வானோ என நினைத்து ரவி சொல்ல தயங்கினான். சேகர் நீ போய் விளையாடுடா ஒண்ணும் பிரச்சனையில்லை என்று தன் கண்களில் வழியும் கண்ணீரை துடைத்துக் கொண்டே சோகம் ததும்பிய குரலுடன் ரவி கூறினான். ரவி உன் கண்ணீருக்கு காரணம் எனக்கு தெரியாது. ஆனால் கண்ணீருக்கு பதில் தரும் ஆண்டவரைப் பற்றி எனக்கு தெரியும். நீ இயேசுவிடம் முழங்கால்படியிட்டு உன் கவலைகளை அவரிடம் சொல்லி ஜெபம் பண்ணு நிச்சயம் விடுதலை தருவார். ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. அதிகாலையிலே ஆண்டவரிடம் ஜெபம் செய்து அந்த நாளை ஆரம்பித்தால் தேவன் நம்மைக் காப்பாற்றி ஆறுதல் செய்வார் என்று கூறி சேகர் அவ்விடம் விட்டு விளையாட சென்று விட்டான். அழுது கொண்டிருந்த ரவி, எழுந்து தன் வீட்டுக்குப் போய் தேவனிடம் முழங்கால் படியிட்டு தன் கண்ணீருக்கான காரணங்களைச் சொல்லி அழுதான். தன் பாவங்களையும் அறிக்கையிட்டான். ரவி

**சிந்தனை துளி**

**கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்க இன்று ஏராளமானோர் உண்டு. ஆனால், கிறிஸ்துவை வாழ்வில் காட்ட யாருமில்லை.**



ஜெபம் செய்து முடித்தவுடன் கவலை அவனை விட்டு நீங்கியதை உணர்ந்தான். மகிழ்ச்சி அடைந்த ரவி இந்த மகிழ்ச்சியை தினமும் நான் அடைய வேண்டும் என்று தன் உள்ளத்தில் விரும்பினான். சேகர் தன்னிடம் கூறியதை நினைவில் வைத்து அதிகாலை ஜெபத்துடன் நாட்களை ஆரம்பிக்கும் பழக்கத்தை தனக்கு சொந்தமாக்கி கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்க்கையில் ரவி சமாதானத்தையும், வெற்றிகளையும் பெற்றான்.

குட்டீஸ் இப்போ உங்களுக்கும் அதிகாலை ஜெபம் செய்து புதிய நாளை ஆரம்பிக்கனும்னு ஆசை வந்துட்டுல.... உங்க நண்பர்களுக்கும் சொல்லுங்க. நன்மைகளைக் காணுங்கள்.

**கருத்து:**

எந்த சூழ்நிலைகளிலும் அதிகாலையிலே எழுந்து ஜெபம் செய்ய மறக்கக் கூடாது.


**ஜெபம்:**

ஆண்டவரே, அதிகாலையிலே உம்மை நோக்கி ஜெபம் செய்ய கிருபைதாரும். ஆமென்.

**மனப்பாட வசனம்:**

அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். நீதி 8:17

# தேவ மனிதன்



சங் 23:5–என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்.

சங் 86:6–கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவி கொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.

சங் 119:18–உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

சங் 17:8–கண்மணியைப் போல என்னைக் காத்தருளும்.

சங் 141:3 – கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும். என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்.

சங் 18:34–என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்.

சங் 17:5– என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்.

சங் 51:10, தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்.

– P. மிகாவேல், பணகுடி

# வில்லியம் கேரி

கிறிஸ்துவுக்காக வாழ்ந்தவர்கள் வரிசையில் இந்த இதழில் வில்லியம் கேரி என்ற மாமனிதரின் வாழ்க்கைக் குறிப்பை தெரிந்து கொள்வோம். இவர் 18ம் நூற்றாண்டில் நமது இந்திய தேசத்தில் வந்து சுவிசேஷப் பணி செய்த அறிஞர். இந்தியாவில் 41 ஆண்டுகள் பணிபுரிந்து ஒரு முறை கூட தனது தாய்நாடான இங்கிலாந்து தேசத்திற்கு செல்லாதவர். உலகில் பல மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தை மொழி பெயர்த்து கொடுத்தவர். இன்றைய மிஷனெரி இயக்கங்களின் தந்தை என்று போற்றப்படும் மாமனிதர்.

இவர் இங்கிலாந்து நாட்டில் உள்ள நார்த்தாம்டன்ஷயர் என்ற இடத்தில் 1761ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ஆம் தேதி பிறந்தார். இளம் வயதிலேயே பல மொழிகளைக் கற்று தேர்ச்சி பெற்றார். தனது 27ஆம் வயது வரையிலும் செருப்புகளை பழுது பார்க்கும் தொழிலை செய்து வந்தார். பின்னர் சுவிசேஷப் பணிக்காக குருத்துவப் படிப்பினை முடித்தார். 1786ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ஆம் தேதி குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். வசதியான வாழ்வோடு குருத்துவப் பணியினை இவர் செய்து வந்த போதிலும் இவரது எண்ணமெல்லாம் மிஷனெரியாக பணிபுரிய வேண்டும் என்பதிலேயே இருந்தது. எனவே இவரது விருப்பத்திற்கிணங்க பாப்திஸ்ட் மிஷனெரி சங்கம் இவரை இந்தியாவிலுள்ள கல்கத்தா பகுதிக்கு மிஷனெரியாக அனுப்பி வைத்தார்கள். 1793ஆம் ஆண்டில் கல்கத்தா பகுதிக்கு மனைவியுடன் வந்து சேர்ந்தார். இவருக்கு இங்கு குடியிருக்க வீடு கிடைக்கவில்லை. சில நாட்களில் கையிலிருந்த பணமும் காலியாகி விட்டது. இப்படி நிராதரவான நிலையில் சதுப்பு நிலப் பகுதி ஒன்று இவருக்கு இலவசமாக கிடைத்தது. அதில் குடிசை கட்டி வாழ்ந்தார். **உலக உல்லாசங்களை நாடி, லட்சங்களுக்காக மட்டுமே ஓடி உழைக்கும் இன்றைய போலியான ஊழியர்கள் இவரின் வாழ்க்கையை படித்தாவது ஊழியத்தின் எளிமை, அர்ப்பணிப்பு, ஆகியவற்றை புரிந்து கொள்ள வேண்டும்.** கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்போடு ஊழியம் செய்து வந்த நாட்களில் இவரது 5 வயது மகன் மலேரியாவால் பாதிக்கப்பட்டு இறந்து போனான். இவரது மனைவி மனநிலை பாதிக்கப்பட்டார். இப்படி இன்னல்கள், நெருக்கங்கள், பாடுகள் வந்தபோதும் தனது ஊழியத்தினை தொடர்ந்தார். இவரது ஊழியத்தின் மூலம் பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இவர் 1801ஆம் ஆண்டில் பெங்காலி மொழியில் புதிய ஏற்பாட்டினை மொழி பெயர்த்து வெளியிட்டார். 1819ஆம் ஆண்டில் செராம்பூர் கிறிஸ்தவ கல்லூரியை நிறுவினார். இன்றைக்கும் இந்த கல்லூரி இறையியல் கல்விக்கு சிறந்ததாக உள்ளது.

> சிந்தனை துளி
>
> *தேவன் பிரியப்படுத்தும் ஊழியன் சுட்டிக்காட்டும் இடத்தில் கிறிஸ்து மட்டுமே இருப்பார்.*

கல்விப்பணி, சுவிசேஷப் பணி, வேதாகம மொழி பெயர்ப்பு பணி மட்டுமின்றி சமுதாயப் பணியிலும் அக்கறை கொண்டு சதி என்ற உடன்கட்டை ஏறுதல் என்ற அறிவீனமான கலாச்சாரத்தினை ஒழிப்பதற்கு 1829ஆம் ஆண்டில் சட்டம் இயற்றப்படவும் போராடி வெற்றி பெற்றார்.

**தேவனுக்காக பெரிய காரியங்களை செய். தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்.**

என்ற கருத்தினை உலகம் அறிய ஓங்கி உரைத்தார். 1834ஆம் ஆண்டு தமது 73வது வயதில் இவர் மரித்தார். வாழ்வது ஒருமுறை கிறிஸ்துவுக்காக வாழ்வது மட்டுமே நிலைத்து நிற்கும்.

வில்லியம் கேரி என்ற உண்மையான உத்தமமான ஊழியருக்காக நம் தேவனை துதிப்போம். அல்லேலூயா.



# நாவு

*கர்த்தனே எம் துணையானீர்*
*நித்தமும் எம் நிழலானீர்*
*கர்த்தனே எம் துணையானீர்*

1. *பாவி என்றென்னைப் பலர் தள்ளினார் ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் (2) ராஜா உம் அன்பு என்னைக் கண்டது உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை – கர்த்தனே*

யாக்கோ 1:19 –22ம் வசனங்கள் கூறுவது என்னவென்றால் ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும், ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு (ஏமாற்றாதபடிக்கு) திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். தேவபக்தி உடையவர்களிடத்தில் கறைபடாத வாழ்க்கையும் காணப்படும். தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி எப்பொழுதும் எச்சரிக்கையாயிருப்பான்:

**நாவு** – அநீதி நிறைந்த உலகம்
**நாவு** – சிறிய அவயவம், பேசுவனவோ பெரியது, பெருமையானவைகளை பேசும், அகந்தைக்குரியவை
**நாவு** – நெருப்பு (தீ) நரகத்தீயை கொண்டு ஆயுளைக் கொளுத்தி விடும்
**நாவு** – நல்ல சாட்சியுள்ள முழு மனிதனையும் கறைப்படுத்திவிடும் ஜாக்கிரதை
**நாவு** – அற்பமாமனது, அடங்காத பொல்லாங்கு உள்ளது. சாவுக்குரிய விதம் உண்டு
**நாவு** – உள்ளான உறுப்புதான், வெளியான நற்கிரியை காண்பிக்க முக்கியமானது. வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாக இராவிட்டால் கனியைக் குறித்து கவலைப்பட வேண்டியது வரும். சொல்தவறாதவன் – பூரண புருஷன்

நாவு எலும்பற்ற பற்கோட்டைக்குள் கிடக்கும் சிறிய உறுப்புதான். உலகம் அதற்குள் படுத்துக் கிடக்கிறது. ஆக்கமும், அழிவும் அதிலிருந்து தோன்றும் தித்திப்பும், கசப்பும் உண்டு.

துதிக்கப் பயன்படுத்துவோம், நாம் யாரையும் சபிக்கத் தடைவிதிப்போம்

பேசும் முன் சிந்தியுங்கள், பேசியபின் சிந்திக்க வேண்டிய அவசியம் வராது

விசுவாசி என்பவன்(ள்) நாவடக்கமுடையவன்(ள்)

ஒருவேளை நாம் நம்முடைய நாவினால் வீட்டிலோ, குடும்பத்திலோ, சபையிலோ, பணிபுரியும் இடங்களிலோ, பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ அல்லது எந்த இடத்திலிருந்து நாம் பேசுகின்றோமோ அந்த வார்த்தைகளை எல்லாம் கர்த்தரிடம் அறிக்கை செய்து விட்டு விடுவோம். நம்மை வெறுக்காத ஒரு அன்பு நேசர் உண்டு . அவர்தான் இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர்! நம் பாவத்தைப் போக்கும் உத்தமர்! அவரிடம் மனத்தாழ்மையோடு அறிக்கை செய்து விட்டுவிடும் போது இரக்கத்தை பெறுகிறோம் அவர் தருகிற ஞானமோ சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததயும், மாயமற்றதாயுமிருக்கிறது. இப்படிப்பட்ட ஞானத்தை நாம் வாஞ்சையோடு கர்த்தரிடம் கேட்டு பெறும்போது நமக்கு தருகிறார்.

> சிந்தனை துளி
>
> *பிறர் கண்ணிலிருக்கும் துரும்பு உனது கண்ணிலிருக்கும் உத்திரத்தின் பிரதிபலிப்பாக இருக்கலாம்.*

நமக்கு வேதத்திலிருந்தே கற்று தருகிறார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். நாம் யாவரும் நியாயத் தீர்ப்புக்கு தப்பவே முடியாது. வசனத்தின்படி தான் தீர்ப்பு உண்டு. தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். நம் பரிசுத்தத்தின் தேவனிடம் நாவடக்கம் என்ற ஆசீர்வாதத்தைப் பெற்று நாம் பரலோக ராஜ்யத்திற்கு சுதந்திரவாளியாக மாற அவருடைய கிருபையை பெறுவோம். மேலும் நம்மை மற்றவர்கள் குறை கூறுவதைக் கேட்டு சரியானவற்றை கண்டுபிடித்து நம்மை திருத்திக் கொள்வது நமது கடமை. நம் உள்ளத்தில் பகை உணர்ச்சி, புறங்கூறுதல், மனசாட்சியில் குற்றஉணர்வு இன்னும் பலவித வேண்டாத காரியங்கள் அனைத்தையும் விட்டு மனந்திரும்பும்போது உள்ளார்ந்த மனிதன் புது சிருஷ்டியாகிறான். நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி, நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று, நீதிமானுடைய வார்த்தைகள் அநேகரைப் போஷிக்கும் இப்படியாக நம் அனுதின ஜீவியத்தில் கவனமாக இருக்கிறோமா என்று நம்மை நாமே நிதானித்து ஆராய வேண்டும். மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டதுபோல் நாமும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நம்முடைய சொல்லிலும், செயலிலும், சிந்தனையிலும் கர்த்தரையே பிரியப்படுத்துகிற பிள்ளைகளாய் ஜீவிக்கிறோமா என்று ஆராய்ந்து பாருங்கள். கர்த்தர் நம் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்வார்.

அளவாய் திறக்கட்டும் நமது வாய்கள்

1. நல்லதைப் பேச ஏறெடுக்கும் மன்றாட்டு (சங் 19:14)
2. நன்மையும், உண்மையும், செம்மையுமானவைகளை மட்டுமே பேசுவேன் என்று முடிவு எடுக்க வேண்டும் (நீதி 8:6-8)
3. மெதுவான மறுமொழி சொல்வதே சிறந்தது. கோபத்தை எழுப்பும் கடுஞ் சொற்களை தவிர்த்து, இப்பண்பு நமக்கு இருப்பதற்கு நாம் ஜெபத்தோடு மிகுந்த கவனத்துடன் முயற்சி செய்ய வேண்டும். எந்நிலையிலும் நிதானத்துடன் அறிவை பயன்படுத்தி பேசினால் அதை கேட்கிறவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ வருட்சம். நீதி 15:1-33.
4. பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் நீதி 12:22
5. பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். வெளிப்படுத்தல் 22:15
6. பொய்சாட்சிக்காரனும் பொய்களைப் பேசுகிறவர்களும் தண்டனையைப் பெறுவார்கள். நீதி 19:9
7. புறங்கூறி பிறரின் இதயத்தை நோகச் செய்யாது நமது நாவை அடக்கிக் கொள்ளலாமே. நீதி 11:11-13, 12:18-28
8. கோள் சொல்பவர்களையும், பொய் பேசுகிறவர்களையும் விலக்கி வைக்கலாமே. நீதி 26:17-28
9. நம் வாயைக் காப்போம், உதடுகளை விரிவாய்த்திறந்து ஏன் கலக்கமடையவேண்டும். நீதி 13:3
10. பதில் சொல்லும் முன் காரியத்தின் அனைத்து பகுதிகளையும் நன்கு கேட்டு உணரவேண்டும். நீதி 18:13
11. மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும். மத் 12:36
12. அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக. கொலோசெயர் 4:6
13. என் வாய் சத்தியத்தை விளம்பும். ஆகாமியம் (பொல்லாங்கான பேச்சு அடுத்தவர்களை கெடுத்து பேசுதல்) என் உதடுகளுக்கு அருவருப்பானது. நீதி 8:7
14. சொற்களின் மிகுதியினால் பாவமில்லாமற்போகாது – ஞாபகம் இருக்கட்டும். நீதி 10:19
15. நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும். சங் 37:30

இன்னும் அநேக வார்த்தைகள் நாவைப்பற்றி உண்டு. தேடி வாசியுங்கள். அதனை உட்கொண்டு உங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தி பாருங்கள். கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணுவார். கர்த்தருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.



# நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்




**திசையன்விளை JTK TV யில்**
ஞாயிறு தோறும்
இரவு 9.00-9.30 வரை

**நாகர்கோவில் STN TV யில்**
செவ்வாய் தோறும்
இரவு 9.00-9.30 வரை

**கன்னியாகுமரி REM TV**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
தினமும்
இரவு 9.00 முதல் 9.30 வரை

**கூடலூர் LIVING JESUS**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
தினமும் இரவு 8.00 முதல் 8.30 வரை

**கொடைக்கானல் BLOOD OF JESUS**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
வெள்ளி இரவு 8.00 முதல் 8.30 வரை

**திருநெல்வேலி JTK TV**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
புதன் இரவு 9.00 முதல் 9.30 வரை

## இமயம் T.V. யில்


வெள்ளிதோறும்
அதிகாலை
5.30 – 5.45 வரை
**காணத்தவறாதீர்கள்**

**குன்னூரில் LIVING JESUS**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்

| | |
|---|---|
| ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி | காலை 6.00 - 6.30 |
| செவ்வாய், வியாழன் | இரவு 8.00 - 8.30 |

**மேற்கண்ட இடங்களில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து பயனடையுங்கள்**

**தொடர்பு முகவரி**


04635-257230


9443614676
9597771585
9442157230

Website :
www.wordislife.org
www.wordislife.in
E-mail :
melchijohn@gmail.com
melchi9160@hotmail.com